# குமரன்

32



வல்லுவார்

லக்கிய உலகில்!

ணும் கேக்கும்

றைந்த நண்பர் அ. ந. க.

ருவின் மக்கள் கம்யூன்கள்

மிழ் எழுத்தாளர் இயக்கங்கள்

ரோம சாம்ராச்சிய அடிமைகள்

ாடுமைகள் தாமே அழிவதில்லை

ழைக்கும் வர்க்கமும் பண வீக்கமும்

ண்டி எண்ணெயின் மகத்தான சக்தி

மிழாராய்ச்சி மாநாட்டின் படிப்பினைகள்

ார் வேண்டாம் பஸ்ஸில் இடம் தாருங்கள்

பிப்ரவரி 15, 1974

விலை: 40 சதம்

## வெல்லுவார்

வரத பாக்கியான்

விளையும் நெற்கதிர் வீசிடும் மேழிகை
வீச்சினைச் சில மாதங்கள் நிறுத்திடில்
அலரிமாளிகை அம்மையும் பட்டினி
ஆமி, நேவியும் அல்லவோ பட்டினி
கலைகள் செய்பவர், கவிதைகள் செய்பவர்
காலேலேளை சந்தோரினுக் கோடியே
எழுதிடும் அர சூழியர், மற்றவர்
எங்குமே பெரும் பட்டினி அல்லவோ

ஆற்றினை அணைபோடிடும் கைகளும்
அந்த நீரினால் நெற்பயிர் ஓங்கிடச்
சேற்றிலே சதிர் போடிடும் கால்களும்
தேவை நோக்கியே காய்ந்திடும் மேனியும்
காற்றுடன் மழை வெய்யிலென் றேய்தலைக்
கண்டுமே யறியாதவர் மேழியைத்
தூக்கியே வயல் சென்று நெல் வீசுதல்
சோரிடில் புவி சோறிடல் நிற்குமாப.

மாறி மாறியே வந்தனர் போயினர்
மக்களின் அரசாங்க மென் றேதினர்
நேரிலே விவசாயியைக் கண்டுமே..
''நேச்சரை'' அறிவோமெனச் சொன்னவர்
காரிலே பறந்தோடியே வந்தனர்
கைகுலுக்கினர் ஆயினும் மேழிகை
சோருகின்றதே அன்றி வேறொன்றுமே
சேரவில்லையே காரணம் என்னவோ

மாவலி வடக்கேகிடச் செய்குவோம்
மண்டிய பெரும் காடுகள் வெட்டுவோம்
நா வலித்திட இப்படி மேடையில்
நம்பிடும்படி பேசியே எங்களைச்
சீரழித்திடும் எம்பிமார், மந்திரி...
திட்ட வல்லுனர், போலுயர் சக்திகள்
தோலுரித்திடில், மேழிகை தூக்கிடும்
சோதரர் துயர் தூசெனப் போகுமாம்

காலி ரோட்டிலும் கார்கள் பறக்கவும்
கண்டிச் சோலையின் காற்றை நுகரவும்
வாலிபக் குமரோடு சுகிக்கவும்
வைத்ததாருமை... எங்களின் மேழிகள்
ஆழமாய் நிலம் கீறி உழாவிடில்
அங்கு போட்ட நெல் அடியுயராவிடில்
வாழை, வத்தாளை, வெங்காய மென்றிப்படி
வைத்திராவிடில் என்னனீர் செய்குவீர்

இன்று சிற்சிலர் யந்திரச் சாதனம்
இருப்பதாற் சில நன்மைகள் பெற்றுளார்
அன்றி மற்றவர் யாவரும் ''பேப்பரில்''
அரசினர் சொலும் மாதிரித் தேவராய்
நின்றிடல் தனைக் கண்டிலோம் ஆயினும்
நிச்சயம் அவர் நாளையிக் காசினி
வென்றிடல் தனை யார் தடுத்தாலுமே
வெல்லுவார் அரசாட்சியைக் கொள்ளுவார்.



# குமரனின் குறிப்புகள்

குமரன் - 32

பிப்ரவரி 15, 1974

குமரன் பொங்கல் மலர் - ஆண்டு மலர் பற்றி பாராட்டிப் பல கடிதங்கள் வந்தன. எழுதியவர்களுக்கு எம் நன்றி.

தொடர்ந்து கவிதைகளே மீண்டும் வந்து குவிகின்றன. கட்டுரை, சிறுகதைகள் எழுதும்படி நண்பர்களை கேட்கின்றோம். புதிய பகுதிகள் ஆரம்பிக்க வேண்டின் தெரிவிக்க; கவனிப்போம்.

இந்த இதழில் தமிழாராய்ச்சி மகாநாடு, அதன் இறுதி நாள் நிகழ்ச்சி பற்றிய எமது கண்ணோட்டத்தை ராமன் எழுதியுள்ளார். மக்கள் இலக்கியம் படைப்பதாகக் கூறிக்கொள்ளும் பல எழுத்தாள வீரர்களே மக்கள் எழுச்சியின் காரணத்திற்குரிய சரியான காரணத்தைக் காண முயலாது கண்துடைப்புப் பேசுகின்றனர். உரோம சாம்ராச்சியத்தில் இருந்த வர்க்கபேதமான சட்டப்பிரிவுகளுக்கும் இன்று நிலவுவதற்கும் அதிக பேதமில்லை என பெருமாள் கூறுகிறார்.

எண்ணெய் நெருக்கடி, பஸ், ரெயில் பிரயாணங்களின் சீர்கேடுகள், கட்டண உயர்வு பற்றி கட்டுரைகள் உள்ளன.

முற்போக்கு எழுத்தாளரில் ஒரு சிலர் 1963இல் பின் தங்கிவிட அதன் பின்னர் வளர்ந்த காலத்தை புரட்சி எழுத்தாளரின் காலகட்டமாக மாதவன் கூறுகிறார். அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பிளவு புடம் போடுவதற்குப் பயன்பட்டதாகக் கருதுகிறார்.

சீனாவின் மக்கள் கம்யூன்கள் கம்யூனிச சமுதாய அமைப்பின் முன்னோடிகளாக எவ்வாறு மாறுகின்றன என்பதைத் தொடர்ந்து விளக்க உள்ளார் கலி.

அ. ந. கந்தசாமி பற்றிய கட்டுரை, சிறுகதைகள், வழமைபோன்ற புதுயுகக் கவிதைகள் யாவையும் ஊன்றிப் படிக்க. உங்கள் கருத்துகள், சந்தேகங்களை எப்பொழுதும் தயங்காது எழுதலாம்.

அச்சுக்கலையில்

50

ஆண்டுகள் அனுபவம் பெற்றோர்

★ அழகான

★ அவசர

★ வர்ண

அச்சுவேலைகளுக்கு

எம்முடன் உடனே தொடர்புகொள்ளுங்கள்!

தொலைபேசி

21388

குமரன் அச்சகம்

201, டாம் வீதி :: கொழும்பு-12.



# கொடுமைகள் தாமே அழிவதில்லை

— மாதவன் —

"என்ன மூப்பன் என்னைத் தெரியேல்லையா?" கட்டிய ஓலைக் கீற்றில் நெருப்பை மூட்டி, தீச்சுவாலையை எழுப்பும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்த சின்னப்பன் என்குரல் கேட்டு ஒரு தடவை நிமிர்ந்து, கூர்ந்து என்னைப் பார்த்தான். முதுமையைக் காட்டும் தாண்ட கண்கள்; உச்சி வழுக்கையாயிருந்த போதும் பின்புற மயிர்களைச் சேர்த்து முடிந்த சிறு முடி; தூர்ந்த காதில் கடுக்கன்கள் பெண்டுலம் போல ஆடிக் கொண்டிருந்தன.

"ஓ தம்பியா, என்ன அப்பிடிக் கேட்கிறியள். எப்ப வந்தது? என்னசெதி"

தன் வேலையை விட்டு சின்னப்பன் எழுந்து நின்ருன். முதுகில் சிறிது கூனல் விழுந்து விட்டது. துடை தெரியுமளவிற்கு செம்பாட்டு மண்ணிறமான வேட்டியை உருட்டிச் செருகியிருந்தான். வெற்றிலை தொடக்கம் சில்லறைக்காசு வரை அடங்கிய அவனது வழமையான கொட்டைப் பெட்டி இடையில் தெரிந்தது.

"இவர் என்ரை பெண்சாதிக்கு மாமன் முறை. அதுதான் செத்த வீட்டுக்காக வந்தனுன்"

"அப்ப நான் கொஞ்சம் கவன மெடுத்தெல்லோ எரிக்கவேணும். பச்சை விறகு. நெருப்புப்பிடிக்கப் பஞ்சிப்படுது." நளினமான பேச்சு. சின்னப்பன் மீண்டும் குனிந்து விறகுச்சிராய்களில் நெருப் பேற்ற முயன்ருன்.

நேரம் மூன்று மணிக்கு மேலான போதும் வெய்யில் கொளுத் திக் கொண்டேயிருந்தது.

"என்ன வீரமெல்லாம் பேசி, கொடுமையெல்லாம் செய்தான். இப்ப என்ரை கையாலை எரியிருன். கையாலை நாங்க தொட முடியாது. நெருப்பாலேதான் சுடமுடிகிறது. தம்பிக்கு சொந்த மெண்டு கோபம் வராதெண்டு நினைக்கிறன்" சின்னப்பு மீண்டும் தொடர்ந்து சொன்ஞன். நான் சிரித்தேன்.

சுடலைக்கு வந்த அனைவரும் மடத்திலே ஆறியிருந்து சுருட்டுப் புகைத்து சுடலைஞானம் தொடக்கம் அரசியல்வரை கதைத்துக் கொண்டிருந்தனர். ஒரு பகுதியில் விறகு வெட்டிய பள்ளர், பாடை கட்டிய கட்டாடி, மேளமடித்த பறையர், கொள்ளிசுமந்த பரியாரி ஆகிய அனைவருக்கும் கணக்குத்தீர்த்துக் கொண்டிருந்தனர்.

"என்ன கதை பேசிருய்,"

"இப்பெல்லாம் வாய்க்கொழுப்பு மெத்திப் போச்சு"

"கொடுத்ததை வாங்கிக் கொண்டு போ"

"அந்தக் காலமெல்லாம் மலையேறிப் போச்சு"

"கூலி என்ருல் கூலி தான் வை"

"வேண்டா மென்ருல் அவன் போகட்டும் விடுங்கோ"

"நாளைக்கு அவன் வராவிட்டாலும், கேட்டதைக் குடுத்துத் துலையுங்கோ"

வழமையான குரல்கள் அங்கும் கேட்டுக்கொண்டிருந்தன. சின்னப்புவின் உதவியாட்களும் கூலிபெற ஓடிவிட்டனர். சின்னப்பு மட்டும் எதிலும் ஆசைப்படாதவன்போல தன் கடமையைச் செய்துகொண்டிருந்தான். நான் அவனது தனிமையைப் பார்த்தே பேசச் சென்றேன். அவன் வீட்டுக்கு நான் முன்னர் அடிக்கடி செல்வேன். அவன் மகன் செல்லனும் நானும் நீண்டகால நண்பர்கள்.

"என்ன சின்னப்பு இந்த வயதிலேயும் ஏனிந்த தொழில். வீட்டிலே கிடக்கிறதுதானே."

"என்ரை மேன் சொல்லிறமாதிரியே தம்பியும் சொல்லுகிருய். ஆனல் தான் ஒரு காரியமாகவே இன்னும் இந்தத் தொழிலை விட்டு விடவில்லை."

பேசிக்கொண்டிருந்த போதும் சின்னப்பன் தன் தொழிலில் கவனமாகவேயிருந்தான். சிராய் விறகுகளை எரியும் சுவாலையின் மேல் வைத்து நெருப்பைப் பலப்படுத்திக்கொண்டிருந்தான்.

"அது என்ன காரியமென்று நான் அறியப்படாதோ"

நான் ஆர்வத்தோடு கேட்டேன்.

"நான் எவருக்கும் சொன்னதில்லை தம்பி. உமக்கு மட்டும் நான் சொல்லத்தான் வேண்டும். இந்த ஊரிலே இன்னும் ஒரு நாலைஞ்சு பேர் இருக்கிருங்கள். அவங்களை நெருப்பு மூட்டி என்ரை கையாலே தான் சாக முந்தி எரிச்சுப்போட்டுப் போகவேணும். அது ஒண்டுதான் ஒரே ஆசை எனக்கு மிஞ்சியிருக்கு. இதே தொழிலை இன்னும் தான் தொடர்ந்து செய்யிறதற்கும் அது தான் காரணம்."

சின்னப்பன் வேலையைவிட்டு எழுந்து நின்று சொன்ஞன். அவ்வேளை அவனது வார்த்தையில் அழுத்தத்தையும் கண்களில் சினத்தையும் கண்டேன். சவமெரிக்கும் சாதாரண இழிசனர் எனக் கருதப்படும் மனிதஞன சின்னப்பனுக்கும் வாழ்க்கையில் இலட்சியமொன்று இருக்கிறது! என் நெஞ்சில் ஆர்வம் மேலிட்டது.

"யார் அந்த நாலு ஐஞ்சுபேர்?"



"தம்பிக்குத் தெரியாதா என்ன? அவங்கள் தானே இந்த ஊரின் பெரிய புள்ளியள். வெள்ளைவேட்டிக் கள்ளன்கள். அயோக்கிய உலுத்தன்கள். சாதி வெறியிலேயும் பணத்திமிரிலேயும் அவங்கள் செய்த கொடுமைகள், அப்பப்பா. தாங்கள் சாகமாட்டம் என்று இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிருன்கள்"

"நான் தானே இப்ப ஊரிலேயேயில்லை. கொழும்போடு இருக்கிறன். பேருகளை கொஞ்சம் சொல்லன். அறிந்திருக்கிறது எங்களுக்கு பயன்படும்."

"அவன் அடைவு கடைச் செல்லையா, எங்க உழைப்பையெல்லாம் வட்டியாய் வாங்கிச் சேர்த்து வைத்துக் கொண்டு எங்களையே அடக்கிக் கொண்டிருக்கிருன். அவன் கேட்பவர்களெல்லாம் வேலைக்குச் செல்லவேணும். அவன் கொடுப்பதுதான் கூலி. எத்தினை குடிசைகளுக்கு தீ வைச்சான். புளியடி ஆறு முகத்தான் சங்கக்கடையை பிடிச்சு வைச்சுக்கொண்டு என்ன ஆட்டமெல்லாம் ஆடுகிருன். கூப்பன் துண்டுகளை வெட்டி வைத்துக்கொண்டு சாமான்களை கள்ள விலையில் வித்துப் போடுகிருன். எங்களுக்கெல்லாம் இடையிடைதான் ஏதேன் கிடைக்கும். புது வீடு கட்டி மேளுக்கு ஒரு இஞ்சினியரைத் தேடிக்கொடுத்துவிட்டான். பழைய சேர்மன் பொன்னையா ஆடின ஆட்டங்கள் இன்னும் குறையவில்லை. வயதுபோன நேரத்திலே, தான் சாதியே பார்ப்பதில்லை என்று சொல்லிக்கொண்டு வடிவான பன்ப் பெட்டைகளைப்பார்த்து வீட்டுக்கு வேலைக்கு வைச்சிருக்கிருன். என்ன தம்பி நாடு முன்னேறிவிட்டுது என்று சொல்லுறியள், இன்னும் நாங்கள் இஞ்சை அடிமையாய்தானே வாழுறம். என்ன சுகத்தைத்தான் கண்டம். அவங்கள் சொல்லுறபடிதான் வோட்டும் போடவேண்டியிருக்கு. ஒரு மாற்றத்தையும் நான் காணேல்லை."

தீச்சுவாலைகள் எழுந்து கொண்டிருந்தன. காற்ருேடு சேர்ந்து பிணப்பெட்டியிலேயே தீ பிடித்துக் கொண்டது. சின்னப்புவின் முக்கிய பங்கு வேலை முடிந்துவிட்டது. நிமிர்ந்து எழுந்தான்.

"மாற்றம் ஏற்படேல்லை என்று சொல்லிவிட முடியாது சின்னப்பு. உனக்கே வயதாய்ப் போச்சு. உவங்கள் சாகு மட்டும் நீ இன்னும் எத்தினை வருஷம் காத்திருக்கப் போருய். அதுக்கு முந்தி நீ செத்துப் போனல்......"

இழுத்துக் கொண்டே சொன்னேன். சின்னப்பு சிறிது நேரம் சிந்தித்தபடி மடியை அவிழ்த்து, கொட்டைப் பெட்டியை விரித்து ஒரு சிறு புகையிலைத் துண்டை எடுத்து வாயில் போட்டு சப்பிக் கொண்டே சொன்ஞன்:

"பஞ்சம் தான் வந்தாலும் நான் அப்பிடி கெதியாய் செத்துப் போக மாட்டன். ஆனல் செல்லன் என்ன சொல்லுகிருன் தெரியுமா?"

"தகப்பனுக்கிருக்கும் வஞ்ச மெல்லாம் மகனுக்கு இருக்காதா என்ன. அவன் என்ன சொல்லுகிறான்?"

செல்லன் என் நண்பனே. அவனை நான் நன்கு அறிவேன். அவனது கோட்பாடுகளை நான் அறிவேன். ஆயினும் அதை சின்னப்பு மூலமே அறிய விரும்பினேன்.

"பழம் தானே விழுந்துவிடும், கொடுமைகள் தானே அழிந்துவிடுமென்று ஏனப்பா காத்திருக்க வேணும். நாங்கள் உவங்களை விழுத்திவிடுறம். நீ வேணுமென்றால் எரிச்சுப் போடு என்று சொல்லுகிறான்."

சின்னப்பு சிரித்துக் கொண்டே சொன்னான். அது வெறும் கேலிச் சிரிப்பல்ல. பெருமையும் பயமும் கலந்த சிரிப்பு. மகனின் துணிச்சல், அவனுக்கு அதனால் ஏதாவது நேர்ந்துவிடுமோ என்ற அச்சம். இரண்டும் சிரிப்பில் ஒளிர்ந்தது.

"ஏனும் அவன் இன்னும் காரியத்தைச் செய்யாமலிருக்கிறான்."

அவன் மூலமாகவே, அவனது பார்வையில் விஷயங்களை அறிய முயன்றேன்.

"அவன் எனக்கு முழுக்க விளங்காத தத்துவமெல்லாம் பேசுறான். ஊரவைக்குள்ளேயே அவங்கள் மேலே வெறுப்பு ஏற்படச் செய்து அவங்களைக் கொண்டே செய்விக்க வேணுமென்று சொல்லுறான். ஏதோ கூட்டம் கூட்டமென்று இரவிரவாய்த் திரிகிறான்."

"மாற்றம் ஏற்படேல்லை என்று சொல்லாதை சின்னப்பு. நீ நினைப் பதிலும் பார்க்கப் பெரிய, பெரிய மாற்றங்களைச் செய்யத்தான் அவங்கள் வேலை செய்யிறாங்கள். உலகத்திலை எத்தனையோ நாடுகளிலை நடத்திய அனுபவங்களை வைச்சுக் கொண்டுதான் முயற்சி செய்யிறாங்கள்."

"ஏதோ நானும் உயிரோடை இருக்கேக்கையே இதையெல்லாம் பார்த்திட்டுச் சாகவேணும். இவங்களையும் எரிச்சுப் போட்டுச் சாக வேணும்."

"காலையிலை வாறனென்று செல்லனிட்டைச் சொல்லி வைக்கிறியா? நான் வரப் போறன். நீ கூலி வாங்கேல்லையா?"

"சரி தம்பி. நானும் வாங்க வாறன். நான் அவங்கள் தாறத்தை வாங்கிப் போடுவன். நான் நல்ல விசுவாசமானவன் என்று உவங்கள் நினைக்கிறாங்கள். என்ரை நெஞ்சுக்கை எரியிற நெருப்பையும் வஞ்சத்தையும் உவங்கள் அறிய மாட்டாங்கள்."

சின்னப்புவும் என்னோடு வந்தான்

"காசை வாங்கி என்ன செய்வாய்?"

"இன்றைக்கு அந்த அயோக்கியனோடு சேர்ந்த இந்தப்புண்ணியவானை எரித்த நாளெல்லா. கள்ளுப்போட்டு கொண்டாட வேணும். தம்பிக்கு சொந்தக் காரனென்று கோபம் வந்து விடுமோ"



"அப்பிடி ஏன் நினைக்கிறாய்? எனக்குத் தெரியாதா என்ன. என் பெண்சாதியை திருப்திப் பண்ண வேணும். வேறும் வேலைகளிருக்கு அதுக்குத்தான் வந்தனான்"

மடத்தடிக்கு வந்து விட்டோம். நான் பிரிந்தேன்.

"இந்தா, சின்னப்பு வந்திட்டான். அவன்தான் உவங்களுக்கை ஒரு நல்ல குடிமகன். கூலியைக்குடுங்கோ"

ஒருவர் சொன்னார்.

"காலையிலை கடாத்தப் போறம். நிண்டு நீறுபூக்கும் வரை எரிச்சுப் போட்டுப் போக வேணும்."

மற்றொருவர் அதிகாரக்குரலோடு கூறினார். சின்னப்பு நயத்தோடு சொன்னான்:

"என்ன நயித்தை, நான் அப்பிடிக் கவனிக்காமல் விடுவனா, எங்கடை ஊருக்கை எத்தனை அதிகாரத் தோடைவாழ்ந்த பெரிய சமக்காரனெல்லே. நான் சும்மா விடுவனா. ஒரு எழும்புத்துண்டு விடாமல் வடிவாய் எரிச்சுப் போட்டுத்தான் ராத்திரிக்குக் கள்ளுப் போடப் போவன்"

சிந்தனையில் இரத்தம்
சீறட்டும்! செல்லரித்த
சித்தவினை யாடல்களோ
செத்தொழிந்து போகட்டும்!

* * *

சூளை நெருப்பில் அக்கினிப் பூவாய்
சுடரும் ஒளிமக்காள்!
வேளை யிதுவே புதிய யுகத்தின்
விதையை விதைத்திடுவீர்!
நாளை உதிக்கும் உதயக் கதிரில்
நாங்கள் ஓர்இனமாய்,
காலைக் கதிரின் உஷையின் போது
கடலாய் ஆர்த்தெழுவோம்!

* * *

சாதியெனும் பேய்களினைச்
சங்காரம் செய்கையிலெம்
— கவிதைசீறும்!
வீதியிலே வாழ்பவரின்
வேதனையை எழுதுகையில்
— வேகும்சொற்கள்!

— ஈழவாணன் – 'அக்கினிப் பூக்கள்'

# தமிழாராய்ச்சி மகாநாடு புகட்டும் படிப்பினைகள்

— 'ராமன்' —

யாழ்ப்பாணத்தில் சென்ற மாதம் நடைபெற்ற அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடு சில நூறு ஆராய்ச்சியாளரின் கூட்டமாக இருக்கலாம்; அம்மகாநாடு தமிழ் ஆராய்ச்சித்துறையில் சாதித்தவை தினையளவாகவும் இருக்கலாம். ஆனால் அதனை அடுத்து மக்களிடை எழுந்த ஆர்வத்தையும் பேரெழுச்சியையும் எவராலும் குறைவாக மதிப்பிட்டுவிட முடியாது.

மொழி, கலை, இலக்கியம், கலாச்சாரம் ஆகியனவற்றில் மக்கள் கொண்டுள்ள பற்றையே யாழ்ப்பாணத்தில் காணமுடிந்தது. அடிப்படையமைப்பான பொருளாதாரத்திற்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுத்தபோதும் மேல்மட்ட அமைப்புகளான மொழி, கலை, இலக்கியங்கள் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களையும் நாம் குறைவாக மதித்துவிடப்படாது.

மக்கள் காட்டும் ஆர்வத்திற்கேற்ற பலன் பெறுகிறார்களா என்பது வேறு விஷயம். உண்மையில் அவர்களின் நலனுக்குப் பயன்படும் கலை, இலக்கியங்கள் வழங்கப்படுவதில்லை. ஆளும் வர்க்க நலன் பேணும் கலை, இலக்கியங்களே அவர்களால் தரப்படுகிறது; பாராளுமன்ற கட்சி அரசியல், பூஷ்வா ஜனநாயகம் ஆகியவையே மக்கள் சுபீட்சத்திற்குக் காட்டப்படுகிறது.

தேர்தலின்போது மக்கள் ஆர்த்தெழுந்து முன் அநீதிவழங்கிய அரசை வீழ்த்தி, வெடி சுட்டுவிட்டு பின்னர் பிரதிநிதிகள் ஆளும் வர்க்கத்துடன் ஒன்றாக, மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். பல தடவை இவ்வாறு ஏமாற்றப்பட்டதும் அவர்கள் பாராளுமன்றத்தின் மேலேயே நம்பிக்கையிழக்கின்றனர். வர்க்க அரசியல், வர்க்கப் போராட்டம் ஒன்றே தமக்கு விடிவு தரக்கூடியது என்பதை உணர்ந்து கொள்கின்றனர். அதேபோலவே கலை, இலக்கியத்திலும் நடைபெறுகிறது. ஏமாற்றப்பட்ட மக்கள் பூஷ்வா வர்க்க நலன்பேணும் கலை, இலக்கியங்களை உதறிவிட்டு தமது வர்க்க நலன்பேணும் கலை, இலக்கியங்களைக் கைப்பிடிப்பர்.



ஆராய்ச்சி மகாநாட்டில் நடந்த ஆராய்ச்சிகள் பற்றிய விபரங்கள், அதனால் மக்களுக்கு ஏற்படக்கூடிய பயன்பற்றி நாம் விபரமாக அறிய முடியவில்லை. ஆனால் மொழி, கலை, இலக்கிய உணர்வால் உந்தப்பட்ட ஊர்வலங்களையும் – தெருச் சோடனைகளையும் – தோரணங்களையும் – மக்கள் கூட்டத்தையும் காண முடிந்தது.

மக்களது ஆர்வத்தையும் உணர்வுகளையும் மதிக்கத் தெரியாதவர்கள், மக்களை மறந்தவர்களேயாவர். அவர்கள் என்றும் மக்கள் முன் தோல்வியேயடைவர்.

மக்களது உணர்வுகள் எவ்வளவாக அடக்கப்படுகின்றனவோ அத்தனை வேகமாக பீறிட்டு எழுவதையும் காணலாம். தமிழாராய்ச்சி மகாநாடும் இதையே காட்டியது.

ஆயுதம் ஏந்த அரசின் அனுமதி பெற்றோரே முதலாக பலாத்காரத்தில் இறங்குகின்றனர். பலாத்காரத்தின் உருவமே அரசு என்று விளக்கினார் லெனின். தவிர்க்கமுடியாத நிலையிலேயே மக்கள் பலாத்காரத்தை எதிர்க்கின்றனர். கையில் கிடைக்கும் புல்லையோ கல்லையோ எடுத்து எதிர்க்கின்றனர்; அதன் பின்னர் ஆயுதங்களைக் கைப்பற்றியே பதிலடி கொடுக்கின்றனர்.

மக்கள் என்றும் ஆயுதங்களை முன்வைப்பதில்லை. அரசே, மக்களை மறக்கும்போது, ஆயுதங்களை நம்புகிறது; முன்வைக்கிறது. ஆனால் மக்களே முடிவானவர்கள்; ஆயுதங்களல்ல. இதையே வரலாறு நமக்குப் போதிக்கின்றது.

மகாநாட்டின் இறுதி நாள் சம்பவங்கள் பொலிசாருக்கோ அரசுக்கோ வெற்றிதேடித் தரவில்லை. அதற்கு மாறாக மக்களின் வெறுப்பையும் வேதனையையுமே அரசு பெற்றுள்ளது. இந்த மனப்புண் விரைவில் ஆற்றப்படவேண்டும். ●

மக்களிடையேயுள்ள சித்தாந்த ரீதியான அல்லது முரண்பாடான பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடிய ஒரே வழி ஜனநாயக ரீதியான முறையாகும். கலந்துரையாடல், விமர்சித்தல், ஆதரவோடு வேண்டுதல், கற்பித்தல் ஆகிய வழிகளைக் கையாளுவதேயல்லாது வன்மை, அடக்குமுறை ஆகிய வழிகளைக் கையாளக் கூடாது.

— மாஓ

## முதலாளித்துவத்தில் கல்வி

1. 10 வீத மக்களுக்கு பயன் படுவது

2. 10 வீதத்தினரின் ஆட்சி ஜன நாயகமற்றது; அடக்கு முறையானது; யுத்தங்கள் நிறைந்தது. அழிவானது.

3 இரட்டையமைப்பு பாடசாலைகள், வசதியுள்ள தனியார் பாடசாலைகள் வசதி குறைந்த பொதுப்பாடசாலைகள்.

4. மதக் கல்வி போதிக்கப்படும்

5. ஆண்-பெண் என்ற பேதம்

6. தேசிய சிறுபான்மை இனங்கள் மீது அடக்குமுறை. இன, மொழி தேசிய பாரபட்சங்கள்.

7. இளைஞர்கட்கு மட்டுமேகல்வி

8. உழைப்பிற்கும் கல்விக்கும் தொடர்பில்லை.

9. மாணவர், புத்தி ஜீவிகளுக்கும் உழைக்கும் வர்க்கத்திற்கும் தொடர்பில்லை.

10. வர்க்க பேதங்களையும் வர்க்க அடக்குமுறைகளையும் நிலை நிறுத்தும் கல்வி.

## சோஷலிசத்தில் கல்வி

1. 90 வீத மக்களின் நலன் பேணுவது

2. 90 வீதத்தினரின் ஆட்சி ஜனநாயகமானது. கொடுமையிலிருந்து விடுபட்டது. சமாதானமானது, சிருஷ்டிகரமானது.

3. அரசு நடாத்தும் பாடசாலைகள் மட்டுமே.

4. விஞ்ஞான பூர்வமான கல்வி புகட்டப்படும்.

5. பாரபட்சமற்ற ஒரே கல்வி.

6. இன, மொழியில் பாரபட்சமற்ற கல்வி, பின்னேறிய பிரதேசங்களுக்கு துரித கல்வி.

7 முதியவர்க்கும் கல்வி.

8. உழைப்புடன் இணைக்கப்பட்ட கல்வி.

9. புத்தி ஜீவிகளும் உழைக்கும் வர்க்கமும் இணைந்துகொள்கின்றனர்.

10. வர்க்க பேதமற்ற சமுதாயத்தை நிறுவ உதவும் கல்வி.

எம். கார்த்திகேசன் 'களனி'யில் எழுதிய கட்டுரையின் சுருக்கம்.

★ குமரன் மேல் ஆர்வமும் மதிப்பும் கொண்டு, தாமாகவே முன் வந்து முன் அட்டைக்கு ஓவியம் வரைந்து தந்தவர் ஈழத்தின் பிரபல ஓவியரான வி. கே. ஆவார். அவருக்கு எம் நன்றி. ஆ—ர்.



# கார் வேண்டாம் பஸ்ஸில் இடம் தாருங்கள்

''கலி''

வசதியான போக்குவரத்து என்பதை வீட்டுக்கு ஒரு கார் என்ற போக்கில் தீர்க்கமுயல்வது கற்பனாவாதம். அத்துமீறிய வீண் உழைப்பையும் செலவையுமே இப்போக்கு வளர்க்கவல்லது. ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளில் கார்கள் மிகுந்துள்ளன. இது எப்படி முடிகிறது? உலக நாடுகளைச் சுரண்டுவதன் மூலமாகவே அவர்களால் இத்தகைய வாய்ப்புகளைப் பெற முடிகிறது. சுரண்டப்படும் நாடுகள் ஏகாதிபத்திய நாடுகள் போல வாழ ஆசைப்படுவது போலித்தனமாகும். வெளிநாட்டுச் சுரண்டல்களை அவர்களால் நிறுத்த முடிந்தால் ஏகாதிபத்திய நாடுகளிலேயே கார் வசதிகள் தாமே குறையும். அப்போது உள்நாட்டுச் சுரண்டல் மூலமாகவே அவர்களால் கார் ஓட முடியும்.

எமக்கு வேண்டியது கார்களல்ல. வசதியான, பாதுகாப்பான, மலிவான, போக்கு வரத்துச் சாதனங்களாகும். வேலைத்தலத்திற்கு, சந்தைக்கு, பிற அத்தியாவசிய இடங்களுக்கு நாம் காலதாமதமின்றி சென்று வர வேண்டும். புகையிரதம் பஸ் இரண்டுமே எமக்கு போதும். இந்த வசதிகளையும் அரசு அண்மையில் நெருக்கடிக்குள் கொண்டு வந்துவிட்டது. பஸ், புகையிரதக் கட்டணங்கள் 40%-50% வரை உயர்த்தப்பட்டுள்ளன. சாதாரண தொழிலாள, விவசாய மக்களின் பிரயாணச் செலவிலும் சுரண்டி லாபம் சேர்க்கும் முறையாக கட்டணங்கள் திடீரென உயர்த்தப்பட்டுள்ளன.

கடகடத்த பஸ்கள்; உடைந்த ஆசனங்கள்; மூச்சுவிட முடியாதபடி மக்கள் நெருங்கி, பாதுகாப்பின்றி பிரயாணம் செய்ய நேரிடுகிறது. புகையிரதப் பிரயாணமும் இவ்வாறேயாகும். இரவு வண்டிகளில் வெளிச்சமில்லை; கக்கூசுகளில் தண்ணீரில்லை; உடைந்த அழுக்கேறிய ஆசனங்கள்; இட நெருக்கம்; வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள் கம்பிகளில் தொங்கியபடி பாதுகாப்பின்றி பிரயாணம் செய்கின்றனர். வண்டிகள் நேரத்திற்கு வருவதில்லை. உரிய நேரத்தில் வேலைக்குச் செல்ல முடிவதில்லை; உழைப்பு நேரமெல்லாம் விரயமாக்கப்படுகிறது.

கட்டணத்தை அதிகரிக்கும்போது மக்களுக்கு வசதியான பிரயாணத்திற்கு எவ்வித உறுதியும் கூறப்படவில்லை. அவதிப்படும் மக்கள் தமது எதிர்ப்பையே தெரிவிக்க முடியாதபடி பொதுசன பாதுகாப்புச் சட்டங்கள் பேசுகின்றன! பண்டங்களின் விலையேற்றத்தால் அவதிப்படும் மக்களுக்கு பிரயாணக் கட்டண உயர்வு மற்றோர் தாங்க முடியாத தலைச்சுமையாகும். ●

எமது கிராமப்புரங்களில் 50 கோடி மக்கள் உள்ளனர். எமது விவசாயிகளின் நிலைமை எமது பொருளாதார அபிவிருத்தியிலும் அரசு ஆதிக்க கூட்டமைப்பிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. — மா-ஓ

### மறுமலர்ச்சிக் காலத்திலிருந்து இன்றுவரை

# தமிழ் எழுத்தாளர் இயக்கங்கள்

— மாதவன் —

ஈழத்துத் தமிழ் ஆக்க இலக்கியம் மறுமலர்ச்சிக் காலத்திலிருந்து ஆரம்பமாகியது என்று கூறலாம். அதற்கு முந்திய காலத்தில் சி. வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோர் தமிழ்நாட்டு இலக்கிய உந்தலில் சிறுகதை, கவிதை உருவங்களைப் படைக்க முயன்றனர். இரண்டாவது உலக யுத்தத்தின் பின் மறுமலர்ச்சிக் காலம் ஆரம்பமாகியது. அ. ந. கந்தசாமி அ. செ. முருகானந்தம், வரதர் ஆகியோர் இக்காலத்தின் முன்னோடிகளாயிருந்தனர். இவர்களிடை அ. ந. கந்தசாமி ஒருவரே மார்க்ஸிச அறிவும் பிறநாட்டு முற்போக்கு இலக்கியங்கள் பற்றிய தெளிவும் பெற்றிருந்தார்: முற்போக்கு என்னும் போது யதார்த்த இலக்கியம், இயற்பண்புவாத இலக்கியம் ஆகியவற்றையே குறிப்பிடுகிறேன்.

மேல்நாட்டு இயற்பண்பு வாத இலக்கியங்களை முதற் தடவையாக துணிச்சலோடு ஈழத்தவருக்கு அறிமுகம் செய்த பெருமை அ. ந. க அவர்களையே சாரும். நானா, அன்னாகரினா ஆகிய நாவல்களை சுதந்திரனில் மொழிபெயர்த்துத் தந்தார். தமிழ் மக்கள் இவற்றை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் அ. ந. க இத்தகைய இயற்பண்புவாத இலக்கியங்களைத்தர முயன்று அவற்றால் கண்டனங்களுக்கும் நெருக்கடிக்களுக்கும் உள்ளாகினார்.

1956இன் பின் தோன்றிய முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்திற்கு மறுமலர்ச்சிக் காலத்திலிருந்து வந்த ஒரு சிலரில் அ. ந. க. முதன்மையானவர். கலை, இலக்கியத் துறையில் மார்க்ஸிச அறிவோடு நுழைந்தவர்களே முற்போக்கு இலக்கிய இயக்கத்தை முன்நின்று நடத்தியவராவர். 'தேசிய இலக்கியம்' என்ற குரலே இக்காலத்தில் எழுப்பப்பட்ட சுலோகமாகும். தேசிய முதலாளிகளின் துணையோடு வந்த பண்டாரநாயக்காவின் ஆட்சியிலேயே இப்புதுக் குரல் ஒலிக்கத் தொடங்கியது.

பலவீனமான தேசிய முதலாளிகளின் வீழ்ச்சி முற்போக்கு எழுத்தாளரின் வளர்ச்சியை பாதிக்கவில்லை என்றே கூறவேண்டும்.

1962இல் நடைபெற்ற முற்போக்கு எழுத்தாளரின் மகாநாடு இவ்வியக்கத்தின் உச்சக்கட்டமாகும்.



சமூக ஏகாதிபத்தியத்தை கட்டி எழுப்ப ஆரம்பித்த திரிபுவாதிகள் சீனாவிலிருந்து விரட்டப்பட்டதும் இலங்கையிலும் சிறுபான்மையினரான திரிபுவாதிகள் முற்போக்கு இயக்கத்திலிருந்து ஒதுக்கப்பட்டனர்.

சங்கமாக இயங்காதபோதும் மார்க்ஸிச, லெனினிச, மாஓ சிந்தனைகளை முன்வைத்த எழுத்தாளர் முற்போக்கு இயக்கத்தை புரட்சிகர கலை, இலக்கிய இயக்கமாக்கினர். தமிழ் எழுத்தாள உலகின் புரட்சிகர ஆக்கபூர்வமான கலை, இலக்கியங்களை இலங்கையில் மட்டுமல்ல தமிழ் நாட்டிலும் பரப்பிய பெருமை இவர்களையே சாரும்.

1971இல் இலங்கையில் நடைபெற்ற ஏப்ரல் கிளர்ச்சி புரட்சிகர எழுத்தாளர் இயக்கத்தை மீண்டும் புடம்போட்டது என்றே கூறவேண்டும். அதுவரை நாளும் அதன் பின்னரும்கூட பாராளுமன்ற அரசியலை எதிர்த்து வந்த சில பிரபல எழுத்தாளர்கள், உதட்டில் சோசலிசமும் செயலில் வர்க்க சுபாவமும்கொண்ட அரசியல் கட்சிகளுக்கு ஆதரவு வழங்கி, தமது புரட்சிகர சித்தாந்தங்களையும் அதற்கேற்ப திரித்துக் கொண்டனர்.

இதனால் புரட்சிகர எழுத்தாளரின் இயக்கம் உடனடியாகப் பலவீனப்பட்டது. ஆயினும் புடம்போட்ட எழுத்தாளர் சிலர் மீண்டும் சோர்வடையாது பல நெருக்கடிகளிடையே தம் பணியைச் செய்து கொண்டேயிருக்கின்றனர்.

சமுதாய வளர்ச்சியின் முன்னோடிகள் எழுத்தாளர்களேயாவர். சமுதாய வளர்ச்சி என்றும் தேங்கிக்கிடப்பதில்லை. முன் என்றுமில்லாதபடி வேகமாக மக்களிடை பிரச்சனைகள் அதிகரித்து வருகின்றன; இவை வர்க்கங்களைக் கூர்மைப்படுத்துகின்றன. மார்க்சிச, லெனினிச, மாஓ சிந்தனைகளைக் கடைப்பிடிக்கும் புரட்சிகர எழுத்தாளர்கள் இந்நாட்டின் நசிந்த வர்க்கமான தொழிலாள, விவசாயிகளுக்கு வீர உணர்வும் செயலூக்கமும் தரும் கலை, இலக்கியங்களைப் படைத்துக் கொண்டேயிருப்பர். ●

புதிய ஊற்று! புதிய சிந்தனை!

**களனி**

(கலை, இலக்கிய, அறிவியல் காலாண்டு இதழ்)

தொடர்பு:
சுப்பிரமணியம் கட்டிடம்,
கண்டி வீதி,
கிளிநொச்சி.

கொழும்பில் கிடைக்குமிடம்:
விஜயலட்சுமி புத்தகசாலை,
248, காலி வீதி,
வெள்ளவத்தை.

# மறைந்த நண்பர்
# அ. ந. க.

● செ. கணேசலிங்கன் ●

நண்பர் அ. ந. கந்தசாமி மறைந்து ஆறு ஆண்டுகளாகிவிட்டன. பல நண்பர்கள்போல இன்று அவரை மீண்டும் நினைத்துப் பார்க்கின்றேன், இறந்த உடனே ஏற்பட்ட சோக உணர்வுகள் இன்று குறைந்துவிட்டன. ஆயினும் கடைசி நாட்கள் இன்னும் நினைவிலே துன்ப அலைகளை எழுப்பிக்கொண்டேயிருக்கின்றன.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். அடிக்கடி சென்று பார்த்து தேவைகளை கவனித்து வந்தேன். அவரது நோய் தீராத நோயாகும். அதை நண்பரே அறிந்திருந்தார். அவரது நோய் பற்றிய விபரங்களை எந்த டாக்டரிலும் பார்க்க அவரே நன்கு அறிந்திருந்தார். மருந்துகளைத் தேடிப் பெற்று உடலைக் காப்பாற்றி வந்தார். தோல் நோய்க்காக உண்ணும் மருந்து அவரது எலும்புகளையே பாதித்துவிட்டது. நீரிழிவு நோய் வேறு. குடும்பமேயில்லை. தனி மனிதனாக கும்பனித்தெருவிலுள்ள ஒரு சிறு ஓட்டலிலுள்ள அறையில் வாழ்ந்து வந்தார். நேரய்க்கேற்ற பிரத்தியேக உணவு கிடையாது. அவர் பெற்ற பென்ஷன் பணம் அவரது மருந்துகளுக்கே அளவாயிருந்தது. எழுத்துமூலம் சிறு வருவாய் இடையிடை வந்துகொண்டிருந்தது.

தமக்குக் கிடைத்த வருவாயை மிகவும் சிக்கனமாகவே செலவு செய்துவந்தார். தன் பணக்கஷ்டங்கள் பற்றி ஒருசில நெருங்கிய நண்பர் தவிர வேறு எவருக்கும் கூறியிருக்கமாட்டார் என்றே நம்புகிறேன். என்னிடம் ஒருதடவை உதவி கேட்டபோது மிகவும் தயக்கத்துடனே, தவிர்க்கமுடியாத நிலையிலேயே கேட்டார். அவ்வேளைதான் என்னாலும் அவரது நிலைமையை அறிய முடிந்தது. மிகவும் வருத்தமடைந்தேன். அவர் கேட்டதை உதவினேன். அதேவேளை 'எவ்வேளையும் தேவையேற்படும்போது தயங்காது கேட்கும்படி'யும் சொல்லியிருந்தேன். மிகவும் நாணயமான முறையிலேயே என் வேண்டுகோளையும் அவர் பயன்படுத்தினார் என்றே கூறுவேன்.



ஆசுபத்திரியில் கட்டிலிலிருந்து இறக்கி விட்டுவிட்டனர் என்ற செய்தி ஒன்று காலையில் நான் அலுவலகம் சென்றதும் டெலிபோனில் அறிந்தேன். உடனே என்னோடு பணியாற்றிய சிங்கள நண்பர், ஆஸ்பத்திரியில் செல்வாக்குப் பெற்றவரை, அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றேன்.

வாட்டின் ஓரமாக இருந்த ஒரு வாங்கில் தன் சிறு உடைமைகளை தலையணையாக வைத்து அரை உயிரில், சவநிலையில், குடங்கியபடி கிடந்தார். என் நெஞ்சு ஒரு தடவை அதிர்ந்ததையும் அச்சோகமயமான காட்சியையும் என்னால் இன்று வரை மறக்க முடியவில்லை. என்றும் மறக்க முடியாது என்றே நினைக்கிறேன். என் சிங்கள நண்பரிடம் அவரின் சிறப்புகள் பற்றிக் கூற முனைந்த போது என் நெஞ்சு அடைத்து கண்ணீரே வந்து விட்டது.

சிங்கள நண்பர் உடனே உரியவர்களிடம் சொல்லி கட்டிலுக்கு ஏற்பாடு செய்தார். நண்பரை தட்டி எழுப்பினேன். குரல் ஒலியெல்லாம் குறைந்துவிட்டது. நான் செய்த ஏற்பாடுகள் பற்றி சொல்லி ஆறுதல் கூறினேன்.

அலுவலகம் திரும்பியதும் பெரியாஸ்பத்திரியில் செல்வாக்குள்ள நண்பர்களிடமெல்லாம் டெலிபோனில் சொன்னேன். முக்கியமாக திரு மூ. கணபதிப்பிள்ளை அவர்கள் சுகாதார அமைச்சின் செயலாளர், ஆஸ்பத்திரி அதிபர் ஆகியவர் மூலம் அ. ந. க. வை தக்கபடி கவனிக்க ஏற்பாடு செய்தார். ஆஸ்பத்திரி அதிபர் அன்று மாலையே சென்று நண்பரை பார்வையிட்டதாகப் பின் அறிந்தேன்.

எப்படியிருப்பினும் ஆசுபத்திரியில் அவர் ஒரு சாதாரண நோயாளியே; உணவு, பதார்த்த வகைகள் நண்பருக்குப் பிடித்தபடி அங்கு எதிர்பார்க்க முடியாது. எங்கள் வீட்டிலிருந்து இடையிடை அனுப்பினேன். ஆயினும் உணவு வகையிலும் அவரை நாள்தோறும் பார்த்து தேவைகளைக் கவனித்ததிலும் நன்கு உதவியவர்கள் அவரது நீண்டநாள் நண்பர்களான இருவர், ஒருவர் இக்பால், மற்றவர் லடீஸ் வீரமணி.

லடீஸ் வீரமணியும் அவரது மனைவியாரும் செய்த பணிகளை என் நெஞ்சம் என்றும் மறந்து விடமுடியாது. நோயுற்றவர்களுக்குப் பணி விடைகள் செய்வதைப் பார்த்திருக்கிறேன். ஆயினும் அ. ந. க. போன்ற ஒருவருக்கு மற்றோர் நண்பரும் மனைவியும் பதார்த்த உணவு ஊட்டுவதில் காட்டிய மனிதாபிமானத்தை நானே பார்த்து வியந்தேன். எந்த உடன் பிறந்த சகோதரரோ, கட்டிய மனைவியோ கூட இத்தகைய ஆர்வத்தோடு பணிவிடை செய்திருக்க முடியாது என்றே கூறுவேன்! சூப், கஞ்சி போன்ற திராவக உணவை அவரை

நிமிர்த்தி இருத்தி வாயில் சிறிது சிறிதாக ஊட்டினர். அவ்வுதவியின் முன் நான் செய்த பண உதவிகளெல்லாம் சிறுமை பெற்றன. ஏனெனில் நண்பரின் உடல் நிலை சாதாரண நோயாளி போன்றதல்ல. நோய் தீவிர மடைய அவரது தோல் நோய் அவரது உருவத்தையே அசிங்க மாக்கிவிட்டது. அந்நோயின் தன்மையை அறிந்த எவரும் அண்மையில் நெருங்கி அவரைத் தீண்டமாட்டார்கள், நானே என் வீட்டுக் குழந்தைகளை நினைத்து தூக்க, நிமிர்த்த தயங்குவதுண்டு. அவரது நெருங்கிய சில நண்பர்களே இந்த நோய்க்கு அஞ்சியே அவரைப் பார்க்க ஆசுபத்திரிக்கு வராது விட்டதையே நான் அறிவேன். (இதை உணர்ந்தோ, உணராமலோ நண்பர் அவர்கள் தன்னை வந்து பார்க்காததற்காக கவலைப்பட்டார்) இத்தகைய நிலையில் லடீஸ் வீரமணி, அவரது மனைவியாரின் தொண்டுகளை மறக்கவே முடியாது. இத்தகைய நல்ல நண்பர்களைப் பெற்றதும் அவரது பாக்கியமேயாகும்.

நான் மூன்றுவார விடுமுறையில் தமிழ்நாடு செல்ல வேண்டி நேரிட்டது. நண்பர் இக்பால், காவலூர் இராசதுரை ஆகியவர்களிடம் அவரைப்பற்றிக் கவனிக்கும்படியும் எதிர்பாராத நிகழ்வு ஏற்படின் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கூறிவிட்டுச் சென்றேன். நண்பர் வாய்விட்டுக் கேட்காத போதும் அவர் என் உதவியை நம்பியிருந்தார். அந்த நம்பிக்கையை நிலைநாட்ட வேண்டும் என்ற நினைவு என் மனதில் என்றும் நிலைத்திருந்தது.

சென்னையிலிருந்து திரும்பியபோதும் அவர் உடல் நிலையில் அதிக மாற்றம் ஏற்படவில்லை. ஆஸ்பத்திரியிலேயே ஏற்றமும் தாழ்ச்சியுமாக அவரது உடல்நிலை நீடித்தது. வேறு வாட்டிற்கு மாற்றப்பட்டிருந்தார்.

சில நாட்களாக அவர் உடல்நிலை மோசமாகிக்கொண்டே வந்தது. மரண பயம் அவரை ஆட்கொண்டது. மீண்டும் வெளியேறி வருவேன் என்ற தெம்பு குறைந்துவிட்டது. அர்த்தமற்ற கதைகள், புலம்பல்கள் மன நிலையை புலப்படுத்தின.

மாலையில் பார்த்தபோது உணர்வற்ற நிலையிலேயே கிடந்தார். நண்பகல் அல்லது மாலையில்தான் நான் வழமையாக அவரைப் பார்க்கச் செல்வதுண்டு. ஆனால் அன்று அதிகாலை எட்டரை மணிக்கே என்றுமில்லாதபடி ஆசுபத்திரிக்கு அவரைப்பார்க்கச் சென்றேன். வாட்டில் அவரது கட்டில் இருந்த இடத்தில் அவரைக் காணவில்லை. நர்சிடம் ஆவலோடு கேட்டேன். அவள் அழைத்துச் சென்று ஒதுக்குப் புறமாக திரையில் மறைக்கப்பட்டிருந்த நண்பரின் உடலைக் காட்டினாள். மரணத்தின் தனிமையும் சோகமும் பயமும் என்னை ஒரு கணம் ஆட்கொண்டது. நெஞ்சு விறைத்துவிட்டது. கண்ணீரே வரவில்லை. ⊛



# நாங்கள்

— வரதபாக்கியான் —

பால் நிலா காய, முற்றப்
பரப்பிலே...அமர்ந்து, யாப்பு
வாளுடன் எதுகை, மோனை
வரம்புகள் எல்லாம் பார்த்து
கால், தலை, கன்னி மார்புக்
காயுடன், அனைத்தும் பாடி
நூல் படைக்கின்ற அந்த
நூதனம் அறியாப் பாலர்

* * *

அந்திவான், தென்றல், பொய்கை
அழகு மீன், அடுத்த வீட்டுச்
சந்திரா, அவளின் மார்புச்
சதை வெளி தெரியும் போது
சிந்திடும் அழகு தன்னைச்
சிறப்புடன் கவிதை செய்யும்
மந்திரம் எதுவும் கற்று
மலர்ந்திடாக் கவிதைக்காரர்

* * *

மென்னுடற் கணிகை மாதர்
மேனியிற் குறும்பு செய்ய
மின்சுழல் விசிறி காற்று
வீசிட மெத்தை மீது
கண் வளர்கின்ற மாடிக்
காரரின் வாழ்க்கை தன்னை
எம் கவி எழுதிச் செல்லும்
இயல்பினை அறியமாட்டார்

* * *

கஞ்சிக்காய் உழைக்கும் மாந்தர்
கடல் மடி தவழ்ந்து சென்று
குஞ்சிறால்.. ஓரா.. ஒட்டி
கூடை மீன் கொணர்வோர், தேகப்
பஞ்சியென் றெதுவு மின்றிப்
பனைமரப் பதனீர் சேர்ப்போர்
சஞ்சலம் துடைக்கப் பாவில்
சரித்திரம் எழுதும் தீரர்.

* * *

# கேள்வி? பதில்!

'வேல்'

கே : மக்களின் வெறுப்புக்கும் அவ நம்பிக்கைக்கும் உள்ளான நிக்சன் எவ்வாறு தொடர்ந்து இன்னும் பதவியில் இருக்க முடிகிறது?

க. சின்னத்தம்பி, - யாழ்'

ப : ஆயுதப்படைகளின் ஆதரவு இருக்கும் வரையும் மக்களின் செல்வாக்கு இழந்த எந்த அரசும் அதிகாரத்தில் நீடித்திருக்கலாம். படைகளிடம் ஆயுதங்கள் நிரந்தரமாக உள்ளன. மக்களின் ஆயுதம் என்று (பூஷ்வா) ஜனநாயக வாதிகளால் கூறப்படும் வாக்குரிமை என்ற சலுகை நாலு, ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவையே வழங்கப்படுகிறது. சட்டத்தை ஆக்குபவராகவும் நிலை நாட்டுபவராகவும் நீதிபதியாகவும் ஆளும்வர்க்கத்தின் நாயகனாகவும் ஆயுதப் படைகளின் காவலனாகவும் நிக்சனே உள்ளார். ஆகவே அடுத்த தேர்தல் வரை பதவியில் இருப்பினும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கே : ஏகபோக முதலாளித்துவம், அரச முதலாளித்துவத்தில் பண்டங்களின் விலைகள் ஏன் ஏறுகின்றன?

மு. உசையின் - கல்முனை.

ப : அதிக பண்டங்களை உற்பத்தி செய்து குறைந்த லாபத்தில் விற்று பணம் சேர்ப்பதிலும் குறைந்த பண்டங்களை உற்பத்தி செய்து அதிக லாபத்திற்கு விற்று லாபம் திரட்டுவதையே ஏகபோக முதலாளித்துவம் விரும்புகிறது; கடைப்பிடிக்கிறது. இரண்டாலும் உற்பத்தி தேக்கமடைவது இயல்பே. அதனால் விலைகள் ஏறிக் கொண்டே செல்வது தவிர்க்க முடியாததாகிறது. இலங்கையிலும் நாம் இந்நிலையையே காண்கிறோம். அரசின் பாதுகாப்பில் இயங்கும் கூட்டுத்தாபனங்களும் லாபம் என்ற குறிக்கோளுடனேயே இயங்குகின்றன.

கே : உலக முதலாளித்துவ பொருளாதாரம் வீழ்ச்சியடைகிறதா?

கே. சுப்பிரமணியம் - கொழும்பு.

ப : ஆம், சந்தேகமில்லாமல் கூறலாம், உதாரணங்கள் : (1) டாலரின் வீழ்ச்சி முதலாளித்துவ நாணய மதிப்புக்களை ஈடாடச் செய்து விட்டன. (2) அந்நாடுகளில் என்றுமில்லாத பணவீக்கம். வட்டி விகிதங்கள் 10 - 12% வரை அதிகரித்துள்ளன. (3) எண்ணெய் தட்டுப்பாடு, கைத்தொழில்கள் முழுமையாக இயங்க முடியவில்லை. பண்ட உற்பத்திகள் வீழ்ச்சியடைகின்றன.



கே : பலாத்காரம், அகிம்சை — ஆயுதப் போராட்டம், சத்தியாக்கிரகம் ஆகியவை பற்றி என்ன கூறுவீர்கள்?

த. சித்திரலேகா — கண்டி.

ப : ஆயுதங்கள் மியூசியத்தில் பாதுகாத்து வைக்கப்படும் பொருட்களல்ல என்றார் மாவோ, ஆயுதம் ஏந்தியவர்களே பலாத்காரத்திற்கு முதற் பொறுப்பானவர்களாவார்கள். அரசு என்பது பலாத்காரத்தால் ஏற்படுத்தப்பட்டது என்ற கருத்தை லெனின் 'அரசும் புரட்சியும்' என்ற நூலில் அழகாக விளக்கியுள்ளார். அகிம்சையை கடைப்பிடிக்கும் ஆடு, மாடு போன்ற மிருகங்களே பெரும்பாலும் எளிதாகக் கொல்லப்படுகின்றன என் இந்திய அறிஞர் சட்டோபாத்தியாய கூறுகிறார்.

பகைமையற்ற உறவுள்ள அரசியல் கட்சிகள் சத்தியாக்கிரகம் என்ற சட்டவழியில் நின்று அரசியலாதிக்கம் பெற முயலுகின்றன. பகைமை உறவுள்ள வர்க்கங்கள் பலாத்காரம் மூலமே தமது பகையைத் தீர்த்துக் கொள்ளுகின்றன.

கே : கலை, இலக்கியங்களை எளிதாக மதிப்பீடு செய்வதற்கு ஒரு வழி கூறுவீர்களா?

க. சிற்றம்பலம் — திருமலை

ப : படித்ததும் அது எந்த வர்க்கத்திற்குச் சேவை செய்கிறது? என்ற வினாவை எழுப்புங்கள் பதில் கிடைக்கும். பூஷ்வா வர்க்கத்திற்குச் சேவை செய்வதானால் குப்பையில் தள்ளுங்கள். தொழிலாள, விவசாய வர்க்கத்திற்கு சேவை செய்வதானால் பாராட்டுங்கள்.

கே : தமிழாராய்ச்சி மகாநாட்டை யொட்டி தமிழர்களிடை ஏற்பட்டிருக்கும் கசப்புணர்ச்சி எதைக்காட்டி நிற்கிறது?

மு. சின்னராசா — கண்டி.

ப : வர்க்க சமுதாயத்தில் மொழி, கலை, இலக்கிய, கலாசாரப் பிரச்சனைகள் தீர்க்கப்படமாட்டா என்பதைக் காட்டிநிற்கின்றது. இச்சூழ்நிலையை ஏகாதிபத்திய ஆசையுள்ள நாடுகள் பயன்படுத்தி நாட்டின் தேசிய உணர்வை சீர்குலைத்துவிடுமோ என்று அஞ்சவும் வேண்டியுள்ளது.

'வேல்'

கேள்வி? பதில்!

# பாணும் கேக்கும்!

— செ. கணேசலிங்கன் —

நீண்டு வளைந்த பாண் கியூ இன்னும் அசையத் தொடங்கவில்லை. மாலை ஐந்து மணி தொடக்கம் கால்கடுக்க நின்ற மக்கள் பொறுமையிழந்து புகைந்துகொண்டிருந்தனர். அரசியல் தலைவர்களை வைது தமது ஆத்திரங்களை பகிர்ந்து கொண்டிருந்தனர்.

'காகம் திட்டி மாடு சாவதில்லை'

யாவையும் கேட்டுக்கொண்டிருந்த பாலசிங்கம் என்ற தொழிலாளி புறுபுறுத்தவர்களுக்குப் பதிலாகச் சொன்னான். யாவரும் அவனைச் சிறிது விசித்திரமாகப் பார்த்தனர். அழுக்கேறிய சேட்; அரையிலே வெள்ளைச் சாரம்; வாராத தலை; இரண்டு, மூன்று நாட்களாக சவரம் செய்யாத முகம்; தெளிவு, கோபம், சிந்தனை யாவும் தொக்கி நிற்பது போன்ற கண்கள்.

"பாணுக்காக கியூவில் தவங்கிடக்க நாங்கள் என்ன தவறு செய்தோம்?"

காற்சட்டைப்போட்ட நரை விழுந்த கிழவர் ஒருவர் திரும்பிப் பார்த்தபடியே கேட்டார்.

"கியூவில் நின்று இந்த அரசு பதவிக்கு வர ஓட்டுப்போட்டீர்களே, அதை மறந்துவிட்டீர்களோ? இப்போது கியூவில் நின்று பாண் வாங்க வைத்திருக்கிறார்கள்"

பாலசிங்கம் உடனே பதில் கொடுத்தான். முன்புறம் நின்றோரும் பின்புறம் தொடர்ந்தோரும் அவனையே பார்த்தனர். ஒவ்வொருவர் முகத்திலும் வெவ்வேறு வித உணர்வுகள் மிளிர்வதை மாலைமங்கல் ஒளி காட்டியது.

"நான் இந்தக் கட்சிக்கு வோட்டுப் போடவில்லை!"

நடுத்தர வகுப்பைச் சார்ந்த பெண் ஒருத்தி கையிலேயிருந்த தன் நீண்ட பர்ஸை ஆட்டியபடியே கோபத்தோடு பதில் கூறினாள்.

"யு. என். பி. மட்டும் இப்படி கியூவில் நிற்க வைத்திராது என்று எப்படிக் கூறமுடியும்?"

பாலசிங்கம் கேட்டான்.



"அவர்கள் ஒருக்காலும் இப்படிச் செய்திருக்க மாட்டார்கள் என்று நான் நிச்சயமாய் சொல்லுவேன்"

பின்புறம் நின்ற மற்றோர் பெண்மணி முதற்பெண்ணுக்கு ஆதரவளித்தாள்.

"இதுக்குமட்டுமா கியூ, வேறு எதுக்குத்தான் இல்லை. வேறை சாமான் ஏதாவது கிடைக்குதா? சீனி, அரிசி, மா எல்லாமே ஒன்றுக்கு மூண்டு விலை. நாங்களெல்லாம் அரை வயிறு கால் வயிறாய் காயிறம். இவர் இந்த கவண்மேன்றுக்கு வக்காலத்துப் பிடிக்கிறார்"

முன்புறமாக மற்றோர் குரல்.

"நான்கூட எழுபத்தைந்து சதம் கடன் வாங்கிக்கொண்டு வந்தனான். பாண் கிடைக்காட்டால் ராத்திரிக்குப் பட்டினிதான்"

அழுக்கான உடையோடு நின்ற ஒல்லியான சிங்களப் பெண் ஒருத்தி கூறினாள்.

சிறுவர் சிறுமியர் கூட கியூவில் நின்றனர். அவர்கள் எதையும் நன்கு புரியாதவர்களாக வேடிக்கை பார்த்தனர்.

பாண் கொண்டுவரும் 'வான்' வந்துவிட்டதாக ஒரு பையன் கத்தினான். கியூவில் நின்ற யாவரும் உசாராகினர். இடையே சவு இல்லாதபடி நெருங்கி நின்றனர்.

'சுதந்திரம் வந்த நாள் தொடக்கம் ஐந்து வருடத்திற் கொருக்கால் வோட்டுப் போட்டீங்களே, ஏதாவது விடிவு வந்ததா?'

பாலசிங்கம் கேட்டான், அவனது வினா பலருக்குப் புரியவில்லை. நிலைமை மோசமாகிக்கொண்டு செல்வதை யாவராலும் அசைபோட்டுப் பார்க்க முடிந்தது.

"வேறை என்னதான் எங்களால் செய்ய முடியும்?"

ஒரு குரல் ஒலித்தது.

"யு என்.பி.க்கும் தமிழரசுக்கட்சிக்கும் நீங்கள் வோட்டுப்போடவில்லையா?"

"ஏதாவது ஒரு கட்சிக்குப் போட்டுத்தானே தீரவேண்டும்".

"வோட்டுப்போட்டுப் பிரச்சனை தீராது என்பது இப்பொழுதாவது தெரிகிறதுதானே"

பாலசிங்கம் அழுத்திக்கூறினான். ஒரே மௌனம்.

கியூ அசைந்துகொண்டு முன்னேறியது.

''ஒரு றாத்தல் பாண் 75 சதம். அதை வாங்குவதற்கு இரண்டு மணித்தியால உழைப்பு நேரத்தை கியூவில், கிடைக்குமா கிடைக்காதா என்ற ஏக்கத்தோடு செலவிடவேண்டும். நாடு எப்பிடித்தான் முன்னேறப் போகிறதோ?''

பொறுமை கடைப்பிடித்த மற்றொருவர் கூறினார். அவர் வெள்ளைக் காற்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தார். பொருளாதாரத்தில் பட்டம் பெற்று எங்கோ வங்கியிலோ, அரசாங்கத்திலோ பணி புரிபவராக இருக்குமோ என பாலசிங்கம் எண்ணிக்கொண்டான்.

''வர்க்க சமுதாயத்தில் மனிதனுடைய அடிப்படைத் தேவையான உணவுப் பிரச்சனையைக் கூடத் தீர்க்க முடியாது என்பதை இது எடுத்துக் காட்டவில்லையா? உழைப்பதற்கு தயாரான பல லட்சம் இளைஞர்களை இந்நாட்டில் வேலையில்லாது தெருச் சுற்றி அலைகிறார்கள். வேலை செய்து களைத்துவிட்டு வந்த நாங்கள் கால் கடுக்க கியூவிலே வேறை நிற்க வேண்டியிருக்கிறது.''

கந்தசாமி கூறி முடிப்பதற்கிடையில் ஒரு பெண் பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னாள்:

''இதற்கெல்லாம் நாம் என்ன தவறு செய்தோமோ தெரியவில்லை.''

''வோட்டுப் போட்டால் சோஷலிசம் தானே வந்துவிடும் என்று தொழிலாளர்களை நம்பி இருந்து விட்டார்கள். ஆளும் வர்க்கத்தவர் தோள்மேல் ஏறி சவாரி செய்யப் பார்க்கின்றனர்.''

''எத்தனை ஆண்டுகள் இன்னும் சவாரி செய்யப் போகிறார்கள்?''

ஒரு குரல் இடை மறித்து எழுந்தது.

''இந்த நாட்டுத் தொழிலாள விவசாயிகள் கண் விழித்து எழும்பும் வரைதான் சவாரி செய்ய முடியும். இன்று அவர்கள் நெஞ்சமெல்லாம் நீறுபூத்த நெருப்பாகி விட்டது. மக்கள் எதையும் மறந்து விடலாம். உணவில்லாது பட்டினி கிடக்க நேரிட்ட ஒரு நேரத்தை என்றும் மறந்து விடமாட்டார்கள்.''

கந்தசாமி கூறிக் கொண்டிருந்த போது கியூவின் முன்புறத்தில், பேக்கரியின் வாயிலில் மக்களின் நெருக்கமும் ஆரவாரமும் கேட்டதும். கியூ உடைந்து மக்கள் பேக்கரி வாசலைமுற்றுகையிட்டுக் கொண்டிருந்தனர்.

''என்ன? என்ன? என்ன நடந்தது?''

ஒரே வினா.



"பாண் முடிந்து விட்டதாம். கேக்கும் பனிசும்தான் இருக்குதாம்''

எல்லோர் முகத்திலும் ஏமாற்றம்; ஆத்திரம். கியூவை விட்டு சிலர் பின்னேற, பலர் முன்னேறிக் கொண்டிருந்தனர்.

''பாண் இல்லாவிட்டால் கேக்கைச் சாப்பிடுங்கள் என்று பிரெஞ்சுப் புரட்சியின் முன்னர் அந்நாட்டு அரசி சொன்னாளாம். சரித்திரப் புத்தகத்தில் படித்ததை இப்போது நேரில் கேட்கிறோம்''

மனமுடைந்த ஒருவர் கொதிப்போடு கூறினார்.

''அதே காலமும் சூழ்நிலையும் இங்கும் வந்து விட்டதையே இவர்களும் கூறுகிறார்கள் ஆனால் ஒன்று. கேக் வாங்கப் பணம் இல்லை என்று போய் விடமாட்டோம். கேக்கைப் பறித்தெடுத்துச் சாப்பிடுவோம்''

கந்தசாமியும் முன்னேறினான். பேக்கரியை முற்றுகையிட்டது போல கூட்டம் முண்டியடித்துக் கொண்டு நின்றது. பேக்கரியின் முதலாளியும் வேலையாட்களும் கூட்டத்தைத் தள்ளி வெளியேற்ற முயன்றனர். நெருக்கம் அதிகரித்ததேயல்லாது குறைந்தபாடாக இல்லை. உள்ளே பனிஸ் வாங்கியவர்கள் வெளியேறவும் முடியவில்லை.

பேக்கரிகாரர் விற்பனையை நிறுத்திவிட்டு மக்களை அகற்றி கதவுகளை அடைக்க முயன்றனர். முடியவில்லை. உள்ளேயிருந்த கண்ணாடிப் பெட்டிகள் உடையும் சத்தம் கேட்டது.

கூட்டத்தை உடைத்துக்கொண்டு சிலர் வெளியேறிக் கொண்டிருந்தனர். கந்தசாமியும் வெளியே மூச்சிழுத்தபடி வந்தான். அவன் கையிலே நசிந்து பிய்ந்த ஒரு கேக் பக்கெட் இருந்தது.

தூரத்தில் பொலிசார் கூட்டத்தை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தனர்.

வெளிவந்துவிட்டது !

புதுக் கணிதம் 7

— முதலாம் பகுதி —

★ முழு ஆண்டு பாடத்திட்டத்தையும் உள்ளடக்கியது.

மாணவர் - ஆசிரியர் - பெற்றார் -

யாவருக்கும் பயன்படக்கூடிய நூல். புதியதிட்டக் கணக்கு முறையில் சிறப்பாகப் பயிற்சி பெற்ற ஆசிரியரால் எழுதப்பட்டது.

விலை ரூ. 3/-

விஜயலட்சுமி புத்தகசாலை

248, காலி வீதி : : வெள்ளவத்தை

கொழும்பு-6.

தொலைபேசி : 88930

# பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள்

— தியாகு —

ஈம் நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் முதலாளித்துவத்தால் பெற்றெடுக்கப்பட்ட குழந்தைகளே. அதனாலேயே முதலாளித்துவ அமைப்பிலுள்ள சீர்கேடுகள் அனைத்தும் கூட்டுறவுச் சங்கங்களிலும் இணைந்துள்ளன. சங்கக்கடையில் நடைபெறும் ஊழல்களை மக்கள் அறிவர்.

உணவுப் பண்டங்களை யுத்த காலத்தில் விநியோகிப்பதே நோக்கமாக இரண்டாவது உலக யுத்த காலத்தில் பெருமளவில் சங்கக் கடைகள் தோன்றின. 12, 13 ஆண்டுகளின் முன் பிலிப் குணவர்த்தன அமைச்சராக இருந்த காலத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்ற புதுப் பெயரில் கூட்டுறவுச் சங்கங்களின் வேலைகளைப் பன்முகப்படுத்தினார். நாட்டின் உற்பத்தி வளர்ச்சியில் இப்புதிய சங்க அமைப்பு எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

1958ல் சீனாவில் கிராமியப் புறங்களில் மக்கள் கம்யூன்கள் பரவலாக அமைக்கப்பட்டன. இந்தச் செய்திகளின் தூண்டலிலேயே பிலிப் குணவர்த்தன பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தார் என்று கூறுவதில் தவறில்லை.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை மத்திய அரசான பூஷ்வா ஜனநாயக அரசே இயக்குகிறது. முதலிட்டவர் வேறாகவும் உழைப்பவர் வேறாகவும் நிர்வகிப்பவர் வேறாகவும் இயங்குகின்றனர். முதலிட்டவர் லாபத்தையும், உழைப்பவர் சம்பளத்தையும் எதிர்பார்க்கும் எந்த அமைப்பிலும் முரண்பாடுகள் தவிர்க்க முடியாதவை. அவை உற்பத்தியைப் பாதிப்படையவே செய்யும்.

சொத்துடைமையே அடிப்படையாகக் கொண்டதும் மக்களுக்கு சமூக பாதுகாப்பும் இல்லாத சமுதாயத்தில் நீதி, நேர்மையான உழைப்பு, சுயநலமற்ற தன்மை ஆகியவற்றை காண்பது அரிதாகும். இவற்றால் சீர்கேடுகள், ஊழல்கள், உற்பத்தித் தேக்கங்கள் தவிர்க்க முடியாதவையாகும்.



# சீனாவின் மக்கள் கம்யூன்கள்

— 'கலி' —

[நாம் கடந்துவந்த அடிமைச் சமுதாயம், நிலவுடைமைச்சமுதாயம், முதலாளித்துவ சமுதாயங்களின் அடிப்படைக் குறைபாடு பண்ட உற்பத்தி மனிதனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாதமையேயாகும். பணம், லாபம், சுரண்டல் உள்ள வர்க்க சமுதாயங்களில் பண்ட உற்பத்தியைக் கட்டுப்படுத்த முடியாது. அதே வேளை இவற்றிடையேயுள்ள முரண்பாடுகள் பண்ட உற்பத்தியின் வளர்ச்சியையும் தேக்கமடையச் செய்கின்றன. இப்போக்குகளால் பண்டங்கள் ஒரு புறம் குவிய பற்றாக்குறை மறுபுறம் வளர்கிறது.

[குமரனில் முன் வெளியிட்ட அமெரிக்கச் சிறு கதையையே இங்கும் ஓர் உதாரணமாகக் கொள்ளலாம். குளிர் தாங்க முடியவில்லை, அடுப்புக்கள் கரிபோடும்படி மகன் கேட்க தந்தை அதிகக் கரியை தோண்டிவிட்டதாக வேலையிலிருந்து நீக்கிவிட்டனர், கரிவாங்கப் பணம் இல்லை என்று கூறுகிறான்.]

பண்ட உற்பத்தி மனிதனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே சோஷலிச பொருளாதாரமாகும். இப்பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கும் சோஷலிச ஜனநாயகத்தை நிலைநாட்டி கம்யூனிச அமைப்பிற்கு வழிவகுப்பதற்கும் வேண்டி இன்று சீனாவில் பரவலாக வளர்ந்துவரும் சமூக அமைப்பு மக்கள் கம்யூன் ஆகும்.

எல்லோருக்கும் எல்லாப் பண்டங்களும் தாராளமாகக் கிடைக்கக் கூடிய தேக்கமற்ற, முரண்பாடற்ற உற்பத்தியமைப்பின் சிறுகூறாக மக்கள் கம்யூன்கள் விளங்குகின்றன. இந்த அமைப்புப்பற்றிய சகல விபரங்களையும் குமரன் மூலம் 'கலி' தர உள்ளார்.]

சீனாவில் புதிய ஜனநாயகப் புரட்சி ஏற்பட்ட 10 ஆண்டுகளின் பின் சோஷலிச சமுதாயத்தில் அமைக்கப்பட்ட மக்கள் கம்யூன் அரசியல், பொருளாதார அபிவிருத்தியின் தவிர்க்க முடியாத வளர்ச்சிப் போக்காகும்.

விவசாய உற்பத்திச் சங்கங்கள் விவசாயத்தில் ஈடுபட கம்யூன்கள் பொருளாதாரத்தையும் கிராம அரச நிருவாகத்தையும் கவனிக்கின்றன. கிராமப்புறங்களில் பாட்டாளிகளின் அரசியல் ஆதிக்கத்தைப் போல சீனாவில் சோஷலிச சமுதாயத்தை அமைக்கும் உறுப்புகளாக கம்யூன்கள் இயங்குகின்றன. விவசாயம் மட்டுமன்றி கைத்தொழில்,

வியாபாரம் ஆகியவற்றையும் இவை கவனிக்கின்றன. கல்வி, சுகாதாரம் பாதுகாப்புக்களுக்கும் இவை வழிநடத்துகின்றன. சுருங்கக்கூறின் அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு விஷயங்கள், கலாச்சாரம் ஆகிய அனைத்தையும் ஒன்றிணைக்கும் புதிய சமூக அமைப்பே கம்யூன் ஆகும்.

உணவு உற்பத்தியையே முதன்மையாக வைத்து சகல அபிவிருத்திக்கும் உறுதியளிப்பதுவே மக்கள் கம்யூனின் கோட்பாடாகும். இது விவசாயம், வன பரிபாலனம், விலங்கின வளர்ச்சி, மீன் பிடித்தல், கைத்தொழில், பழுதுபார்க்கும் கராஜ், ஏற்றியிறக்கல் ஆகிய துறைகளாகவிரிவடையும்.

இவை தவிர உற்பத்திக் கூட்டணிகள் பொருளாதார அமைப்புகளைக் கவனிக்க வேருக இயங்குகின்றன. அவற்ருல் சமாளிக்க மூடியாதவற்றையும் மக்கள் கம்யூன்கள் பொறுப்பேற்கின்றன. உதாரணமாக சிறிய குளங்கள் நீர்த்தேக்கத் திட்டங்கள், விவசாயப் பண்டங்களைப் பதப்படுத்தும் கடைகள், பாடசாலைகள், சுகாதார நிலையங்களாகும்.

இதைத்தவிர டிராக்டர் நிலையங்கள். மின்சார உற்பத்தி நிலையங்கள், நீர்ப்பாய்ச்சல், சாக்கடை, விவசாயயந்திர உற்பத்தியும் பழுது பார்க்கும் கடைகள், வனத்தோட்டங்கள், காளைமாட்டு நிலையங்கள், பரிசோதனை விவசாயப் பண்ணைகள், நடுத்தர பள்ளிகள், ஆசுபத்திரி ஆகியவற்றையும் மக்கள் கம்யூன்கள் பொறுப்பேற்று நடாத்துகின்றன


15–1–1974இல் இருந்து

**'குமரன்' புதிய சந்தா விபரம்**

தனிப் பிரதி : 40 சதம்

ஆண்டுச் சந்தா : ரூ. 5/-

ஆங்காங்கே வரவழைத்து விநியோகிப்போருக்கு விசேஷ சலுகைகள் உண்டு; எழுதுக :

நிர்வாக ஆசிரியர், குமரன், 201, டாம் வீதி, கொழும்பு-12

தொலைபேசி : 21388




# உரோம சாம்ராச்சிய அடிமைகளும் எமது தோட்டத் தொழிலாளரும்

— பெருமாள் —

உரோம சாம்ராச்சியத்தில் ஜனநாயக ஆட்சி நிலவியதாக உலக வரலாறு கூறும். அதே வேளை நாட்டின் பெரும்பாலானோர் அடிமைகளாக வாழ்ந்தனர் எனவும் அதே வரலாறு சொல்கிறது. இது முரண்பாடாக எவருக்கும் தெரியவில்லை. ஆளும் வர்க்கத்தவர் தமக்குள் ஜனநாயக ஆட்சி நடாத்தினர். அந்த ஜனநாயக சட்டதிட்டங்கள் அடிமைகளுக்குக் கிடையா. பிரபுக்களின் சட்டங்களின் படி அடிமைகள் அசையும் சொத்தாகக் கருதப்பட்டனர். விலங்குகள் போல வாங்கி விற்க, நாடு கடத்த அனுமதியிருந்தது. அடிமைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதும் ஏற்றுமதி செய்வதும் வாணிபமாக நடந்து வந்தது. அவ்வேளை மூன்று வகைச் சட்டம் நிலவின (1) அரசர் பிரபுக்கள் சொத்துள்ளவருக்கு ஒரு சட்டம் (2) சொத்தில்லாத போர் வீரர், உழைப்பவர்களுக்கு ஒரு சட்டம் (3) அடிமைகளுக்கு மற்றோர் சட்டம். அதன் பெயர் ஜனநாயகம்.

கடல் நீரில் வாழும் மீனுக்கு நீர் உப்பாகத் தெரிவதில்லை. அதே போலவே ஜனநாயகம் பேசும் நம் நாட்டவர்களுக்கும் இந்நாட்டில் நடைபெறுவதாகக் கூறப்படும் ஜனநாயகத்திடையுள்ள முரண்பாடுகள் தெரிவதில்லை.

எம் நாட்டிலும் மூன்று தரமான மக்களும் அவர்களுக்கு உரிய மூன்று தரமான சட்டங்களும் உள்ளன.

(1) ஆளும் வர்க்கத்தவர், சொத்துடையவர்களுக்கு சொத்துக்களையும் பணங்களையும் பேணவும் பாதுகாக்கவும் சட்டம்.

(2) சொத்து எதுவுமற்று உழைக்கும் கரங்களை மட்டும் கொண்டு உழைப்பை விற்று உயிர் வாழமுயலும் பாட்டாளிகளுக்கு ஒருவித நீதி.

## பலாத்காரம்

வைகறைகள் சும்மா
வலிய வரா...... ஆதலினால்...
சூரியனை நாங்கள்
தொட்டிழுத்துக்
கொண்டுவந்து
ஏழையுலகத்தில்
இன்றைக்கோ, அன்றி......
நாளைக்கோ,
விடியும் பொழுதை
விரைவில் சமைத்திடுவோம்

— ரஞ்சினி – ரத்தினம் —

(3) நாடற்றவர் எனக்கருதப்படும் நவீன அடிமைகளான தோட்டத் தொழிலாளர்களுக்கு மற்றோர் நீதி.

அண்மையில் எமது பிரதமர் புதுடெல்லி சென்று இந்திய சுதந்திரக் குடியரசு விழாவில் கலந்து திரும்பும் வேளை இந்த நாடற்ற நவீன அடிமைகள் பற்றியும் பேச்சு வார்த்தைகள் நடாத்தி வெற்றியோடு திரும்பினார். இந்திய சுதந்திரக் குடியரசின் பிரதமரான இந்திராவும் பேச்சுவார்த்தையில் வெற்றியே பெற்றார். அதாவது இந்நாட்டின் ஒன்றரை லட்சம் தோட்டத் தொழிலாளர்களில் - நாடற்றவர் என்று கூறப்படும் நவீன அடிமைகளில் - 75,000 பேரை இந்தியா ஏற்றுக்கொள்ளும்; 75,000 பேரை இலங்கை ஏற்றுக்கொள்ளும்.

இது அடிமை வியாபாரமல்ல, அடிமைகளை அகற்றும் நவீன வியாபாரம்! அடிமைகள் யார்? உழைக்கும் தொழிலாளர்கள். நாம் ஜனநாயகம் மட்டுமல்ல ஜனநாயக சோஷலிசமே பேசுகிறோம்.

உரோம சாம்ராச்சியத்திற்கும் எமது வளர்ச்சிக்கும் இடையில் அதிக தூரமில்லை.


வெளிவந்துவிட்டது!

இலங்கையின்
தேசப்படப் புவியியல்

பேராசிரியர் க. குலரத்தினம் அவர்களது
முன்னுரையுடன் கூடியது.

G. A. Q., க. பொ. த. உயர்தர, சாதாரண வகுப்புகளுக்கு
மட்டுமன்றி கீழ்வகுப்புகளுக்கும் பயன்படத்தக்க
உயர்ந்த நூல்.

கிடைக்குமிடம்: விலை: 3-75

விஜயலட்சுமி புத்தகசாலை
248, காலி வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-6.

தொலைபேசி 88930




# மண்டி எண்ணெயின் மகத்தான சக்தி

'தியாகு'

அராபிய நாட்டு எண்ணெய் வளங்களை ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகள் இது வரை காலமும் குறைந்த விலையில் சுரண்டி வந்தன. அராபிய பெற்றோலியம் ஏற்றுமதி நாடுகள் சங்கம் அமைக்கப்பட்டதும் அத்து மீறிய சுரண்டல் நிறுத்தப்பட்டது. சென்ற அக்டோபரில் நடைபெற்ற கிழக்காசிய போர் அராபிய நாடுகளின் பலத்தை உலகுக்கு எடுத்துக் காட்ட உதவியது. ஆயுத வெற்றி மட்டுமல்ல தமது எண்ணெய் வளத்தைக் கொண்டே ஏகாதிபத்திய நாடுகளின் கைத்தொழில் பொருளாதாரங்களை வீழ்த்த முடியும் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டினர்.

எண்ணெயை அரசியல் ஆயுதமாகப் பாவிக்கப்படாது என சுரண்டல் நாடுகள் அரசியல் நீதி பேசின. ஆயுதங்களையும் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்படாது என்று இதே ஏகாதிபத்திய நாடுகளுக்கு அரசியல் நீதி கூற எவரும் இதுவரை வரவில்லை.

இஸ்ரேலை ஆதரித்த ஒல்லாந்து, அமெரிக்க நாடுகளுக்கே எண்ணெய் ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு விதித்தனர்.

அராபிய எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் அமைச்சர்கள் தமது அறிக்கையில் பின்வருமாறு கூறினர்:

அராபிய மண்ணை கைப்பற்றி பாலஸ்தீன மக்களை வீடற்ற அகதிகளாக்கிய அநீதியை உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்காகவே எண்ணெய் ஏற்றுமதியில் கட்டுப்பாடு விதித்தோம். எந்த நாட்டின் பொருளாதாரத்தையும் சீர்குலைப்பது எமது நோக்கமல்ல.

ஒரு நாட்டின் உற்பத்திப் பண்டத்தின் விலை அந்நாட்டவராலேயே தீர்மானிக்கப்படுகிறது. எமது தேயிலையையோ, றப்பரையோ மலிவாகத் தரும்படி எந்த நாடும் கேட்பதில்லை. வேண்டுமாயின் நாம் பண்டமாற்றுச் செய்து கொள்ளலாம். அராபிய எண்ணெயின் விலையேற்றத்தை சாட்டாக வைத்து முதலாளித்துவ, ஏகாதிபத்திய எண்ணெய் கம்பனிகள் விலைகளை உயர்த்தி கொள்ளை லாபம் அடிக்கின்றன. எமது அரசும் இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்கிறது என்றே கூறவேண்டும். எண்ணெய் மூலம் கிடைக்கக்கூடிய வியாபார மொத்த வரியை இழப்பதற்கு அரசு தயாராக இல்லை. திடீர் எண்ணெய் விலையேற்றம் குச்சி விளக்கேற்றும் ஏழைகளையும் பாதிக்கத் தொடங்கியுள்ளது.

பண்டங்களின் விலைகள் ஏறத்தொடங்கிவிட்டன. வெளிநாட்டு யந்திரங்கள், மூலப்பொருட்கள். எண்ணெய் ஆகியவற்றை நம்பியிருக்கும் எமது கைத்தொழில்களும் பாதிப்படையவே செய்யும். ❁

---

விவசாயம் ஊரக கைத்தொழிலுக்கும் வழிகாட்டுகிறது. விவசாயத்தை மெதுவான முன்னேற்றப் பாதையில் நவீனப்படுத்துவதும் தொழில்நுட்ப வளர்ச்சியும் அதிக யந்திரங்களையும் உரங்களையும் நீர்த்தேக்கங்களையும் மின்சாரத்திட்டங்களையும் போக்குவரத்துச் சாதனங்களையும் கட்டிடப் பொருட்களையும் நாடிக் கொண்டேயிருக்கும்.

— மா-ஒ

---

## ஆபரேஷன்

உணவுற்பத்தியில் தன்னிறைவு நோக்கி
உற்சாகமாக நடக்கிறோம் என்று
நாளிதழ்களில் ஆளும் வர்க்கத்தினர்
''நாடகங்கள்'' ஆடுகையில் — இங்கு
அந்நியச் செலாவணி அள்ளி வந்த
அன்புத் தொழிலாளிகள் கூட்டமாய்த்
தோட்டத்து மண்ணைவிட்டு
நாட்டின் நாலாபக்கங்களுக்கும்
உண்ணவும் உடுக்கவும் — வாழவும்
வழிதேடி நடந்து கொண்டிருக்கிறார்கள்

தொழிலாளிகளின் அருஞ் செல்வங்கள்
தோட்டத்துரையின் வீட்டில்
ஓட்டல்களில் வயிறுவளர்க்கின்றனர்
சிலர் ஓலைக்குடிசைகளுக்கு
உரமாகிப் போய்விட்டனர்

ஆனாலும் ஆளும் வர்க்கத்தின்
அந்தகக் கண்களுக்கு மட்டும்
இவை அகப்படவில்லை ஆதலின்
அந்த அந்தகக் கண்களுக்கு
ஆபரேஷன் மூலம் ஒளியூட்டும்
அவசியம் எங்களுக்கு — நேர்ந்துவிட்டது

— பேரு. மனோகரன்



# உழைக்கும் வர்க்கமும் பண வீக்கமும்

'சீனி'

பணவீக்கம் என்பது முதலாளித்துவத்தின் ஓர் சுரண்டல் ஆயுதமாகும். இதன் மூலமாகவே முதலாளிகள் தொழிலாளி வர்க்கத்தை அத்துமீறித் தொடர்ந்து சுரண்டிக் கொண்டிருக்கின்றனர்.

ஏகபோக முதலாளித்துவம் அல்லது அரச முதலாளித்துவத்தில் பண்ட உற்பத்தியை உயர்த்த வேண்டிய அவசியமேயில்லை. உற்பத்தியை உயர்த்தி விலைகளை, லாபத்தை குறைப்பதிலும் பார்க்க விலைகளை உயர்த்தியே அதிகலாபத்தைத் திரட்டிவிடலாம். லாபம் என்ற சுரண்டலே நோக்கமான வர்க்க சமுதாய அமைப்பில் எல்லா முதலாளிக்கும் லாபத்தை நோக்கி நாயோட்டம் ஓடுவது இயல்பே.

பணவீக்கம் என்றால் என்ன? பணத்தின் மதிப்பு குறைந்து பண்டங்களின் விலை அதிகரிப்பதாகும். சென்ற ஆண்டு ரூ. 1.50க்கு விற்ற அரிசியின் விலை இன்று ரூ. 6.00 ஆயின் பணத்தின் மதிப்பு 400 சத வீதத்தால் குறைந்துவிட்டது. என்று கூறவேண்டும். ரூ. 1.50க்கு முன்னர் ஒரு கொத்து அரிசி வாங்கினோம். இன்று அதே ரூ. 1.50க்கு கால் கொத்து அரிசியே வாங்க முடியும். சீனி, மா, பாண், மண்ணெண்ணை ஆகிய அத்தியாவசிய பண்டங்களின் விலையும் 100 சதவீதத்திற்கு மேலாக உயர்ந்துள்ளது. ரூ. 200/- மாதச் சம்பளமாகப் பெற்ற தொழிலாளியின் சம்பளம் ரூ. 400 – ரூ. 500 வரை உயரவேண்டும். ஆனால் ரூ. 225/- அல்லது ரூ. 250/-க்கு மட்டுமே உயர்ந்திருக்கலாம். இன்றைய பண்ட விலைகளோடு ஒப்பிடும்போது இத்தொழிலாளியின் சம்பளத்தைக் கொண்டு ரூ. 100 பெறுமதியான பண்டங்களே வாங்க முடியும். மிகுதி ரூ. 150/-ம் முதலாளிகளால் சுரண்டப்பட்டுவிட்டன.

பணவீக்கம் மாதச்சம்பளம் அல்லது நாட் சம்பளத்திற்கு உழைப்பை விற்கும் தொழிலாளர்களையே பெரிதும் பாதிக்கிறது. அவர்கள் தமது உழைப்பின் பெரும் பகுதியை உணவிற்காக செலவிடுபவர்களாகும். உயிர் வாழ அத்தியாவசிய உணவுப் பண்டங்களை

வாங்கவே அவர்களது உழைப்பு போதாமற் போய்விடுகிறது. வாங்கும் சக்தி படைத்த பணக்காரர் சத்தான நல்ல உணவுப் பண்டங்களை எவ்விலை கொடுத்தும் வாங்கிவிடுவர். தொழிலாளர்கள், ஏழை, கூலி விவசாயிகள் மலிவான, சத்தற்ற, பழுதான உணவுப் பண்டங்களையே வாங்கி வயிற்றை நிரப்ப முயல்வர்.

இதனால் அவர்களது உடல்நலம் மட்டுமல்ல, வளரும் குழந்தைகளின் உடல் வளர்ச்சியும் குன்றும். இதைப்பற்றி முதலாளித்துவம் கவலைப்படுவதில்லை. தொழிலாளர்களை உயிர் வாழத்தக்க நிலையில் மட்டும் வைத்து அவர்களது உழைப்பை உறிஞ்சுவதே முதலாளித்துவமாகும்.

இக்காலகட்டத்தில் தொழிலாளர் அணிவகுத்து நின்று போராடுவது அவசியமாகிறது. தொழிலாளரின் போராட்டம் மூலமாகவே நாட்டின் உற்பத்தியை உயர்த்தமுடியும். முதலாளிகளிடமிருந்து பறித்தெடுத்து பணவீக்கத்தை ஓரளவு கட்டுப்படுத்த முடியும்.

இன்று முதலாளித்துவ உலகிலே ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கும் பணவீக்கம் சீனா போன்ற சோசலிச நாடுகளில் ஏற்பட்டுள்ளதா? இல்லை. ஏனெனில் பணவீக்கம் என்பது முதலாளித்துவத்தின் ஆயுதமேயாகும்.

சீனாவில் முன்னர் கிடைத்த விலையிலேயே அத்தியாவசிய பண்டங்களெல்லாம் கிடைக்கின்றன. அவர்களது பணம் மதிப்பிழக்கவில்லை. அத்தியாவசிய பண்டங்களுக்கு தட்டுப்பாடு என்ற பேச்சே கிடையாது.

எம் நாட்டு உற்பத்தி எமது தேவைகளை மறந்து பிற நாட்டார் பொழுதுபோக்கிற்கு தேநீர் அருந்துவதற்காகவே ஆக்கப்பட்டது. அத்தகைய பொருளாதாரம் இன்னும் மாற்றப்படவில்லை. ஏனெனில் வெளிநாட்டாரின் ஆதிக்கத்திலேயே எமது பொருளாதாரம் இன்னும் இயங்குகிறது. யார் இந்த வெளிநாட்டார்? ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளாகும். ஆகவே அங்கே தும்மல் ஏற்படும்போது இங்கு சனி பிடிக்கவே செய்யும். இங்கிலாந்தில், அமெரிக்காவில், யப்பானில் ஏற்பட்டிருக்கும் பணவீக்கம் பற்றி மட்டுமே எமது வானொலி, பத்திரிகைகள் கூறுகின்றன. சோஷலிச நாடுகள் பற்றிய குரலேயில்லை.

பண வீக்கத்தால் துன்பப்படும் தொழிலாள, விவசாய மக்கள் முதலாளித்துவ நாடுகளை ஏன் பின்பற்ற வேண்டும்? சீனா போன்ற சோஷலிச நாடுகளை பின்பற்றலாமே. ●



## மின்னல்

மின்னல், பெருமிடிக்கு
முன்னுரையே...... ஆதலினால்
எங்கள் கவிதையெல்லாம்
எப்போதோ... வரவிருக்கும்
வர்க்கப் புரட்சி யென்னும்
பெருமிடிக்கு, முன்னெழும்பும்
மின்னல்கள்...... ஆமாம்
முன்னுரையே......

— ரஞ்சினி – ரத்தினம்

## ஏதோ ஒரு சக்தி

மாடியிலே...... உங்கள்
மலர் மஞ்சம் சிரிக்கையிலே...
எங்கள் குடிசையிலே......
எரிகின்ற அடுப்புகளில்
ஏதோ ஒரு சக்தி......
எழுந்தடித்தல்
காணுகின்றோம்
நாளை...... அதுவே தான்
நமக்கெல்லாம்
உயிர் மூச்சாய்
ஆளும் திறண் படைத்த......
உழைப்பவரின் எழுச்சியது

— "ரஞ்சினி – ரத்தினம்"

## நியாயம்

கொத்து .... வெட்டு
சுடு...... தூக்கிலிடு......
அங்கே...... என்ன
ஆரவாரம் கேட்கிறது
.......... ஓ ........
யாரோ ஒரு முதலாளியை
உழைக்கும் தொழிலாளர்
சுற்றி வளைத்திருந்து
நியாயம் கேட்கின்றனராம்

— "ரஞ்சினி – ரத்தினம்"

உழைப்பவ னுக்கே
'உழைப்பு' சொந்தமென்றும்
உழுபவ னுக்கே
'உழுநிலம்' சொந்தமென்றும்
தழைத் தோங்கவேண்டும்
தரணியிலே சமதருமம்
நாட்டின் நிலங்கள்......
நாட்டின் வளங்கள்......
அத்தனையும் சனங்கள்
ஆட்சிக்கு வரவேண்டும்
எல்லோரும் இங்கு
எல்லாமும் பெறவேண்டும்

— அன்பு டீன்

## தும்மினால் . . . மலை சாயாது !

தும்மினால்...... மலை சாயாது
தூற்றல்கள் கடல் சேராது
சும்மா வாய்ப் பந்தல் வந்து
சோறுபோ டாது தம்பி
அம்மியில் மிளகாய் வைத்து
அரைப்பதைப் போன்று, பூஷ்வா
வம்பரை அரைக்க வேண்டும்
வா உடன் படையிற் சேரு

— வரதபாக்கியான்

வானத்தில் எழும்பும்
சிவப்புச் சூரியன்போல்
சிவந்து சிவந்து
எழுந்த மாணவரே......

வாருங்கள் இந்த
வையகத்தை வென்றெடுப்போம்
வாருங்கள் இந்த
வையகத்தை வென்றெடுப்போம்!

— அன்பு டீன்

விற்பனையாகின்றன !

புலவர் 'தமிழவேள்' எழுதிய

**தமிழ் இலக்கியத் தொகுப்பு - வினவிடை** ரூ. 3/75

**தமிழ் இலக்கியத் தொகுப்பு - விளக்கம்** ரூ. 5/50

**சைவசமயம் - வினவிடைமுறை விளக்கம்** ரூ 5/-

**பொறியியலும் சடப்பொருட்களின் இயல்புகளும்**

(MECHANICS & PROPERTIES OF MATTER)

ஜி. சி. ஈ. சாதாரணம், உயர்தர வகுப்புகளில்

பௌதிகம், பிரயோக கணிதம்

ஆகிய பாடங்களில் பயன்படத்தக்க நூல்

பரீட்சை மாதிரி வினா - விடைகளையும் கொண்டது

இ. வே. இலகுப்பிள்ளை B. Sc. (Hons.)

இரத்தினா தனபாலசிங்கம் B. Sc.

டாக்டர் மகேசன் ராசநாதன்

எழுதிய

**அறிவுக் களஞ்சியம்**

(Junior Encyclopaedia in Tamil) ரூ. 5-50

பா. பாலேஸ்வரி எழுதிய

**சுமைதாங்கி** ரூ. 1-90

**விஜயலட்சுமி புத்தகசாலை**

248, காலி வீதி, — கொழும்பு-6

தொலைபேசி : 88930



# செஞ்சிகப்பின் வழியில்....

— செங்-சின்

நாங்கள் கைதிகள் அல்ல.
வர்க்கப் போர்க்களத்தினின்றும்
கடத்தப்பட்டவர்கள் மட்டுமே.
நாங்கள் கைதிகள் அல்ல.
எங்கள் மீது எந்தக் குற்றத்தையும்
உறுதிப்படுத்த முடியாது.

எங்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமை
எங்கள் நாடிக் குருதியைப்
பொங்கிப் புரளச் செய்தன.
இரும்புச் சட்டங்கள் சங்கிலிகள்
உயர்ந்த இருட்டுச் சுவர்கள்
எங்களைத் தடுத்து நிறுத்தலாம்
எங்கள் உணர்வுகளை
அவைகளால் ஒன்றும்
செய்துவிட முடியாது.

இலட்சியத்துக்காய் எண்ணிறந்தோர்
இருந்தாலுங்கூட
இறப்பவர்கள் தொடர்ந்து போராடுகின்றனர்.
ஊசிப்போன உணவும் ஒட்டுண்ணிகளும்
எங்கள் ஊனைக் கெடுத்துவிடலாம்
உணர்வை அவைகளால்
அழித்துவிட முடியாது.

"தோல்வியே வெற்றியின் தூண்கள்"
நாம் துணிந்து விட்டோம்.
இறுதி வெற்றி எங்களுக்கே
தொடர்ந்து போரிடுவதற்காய்
நாங்கள் எங்களைத்
திடமாக்கிக் கொள்வோம்

நாளை விடிகின்ற போதில்
எங்கள் செஞ்சிகப்புக் கொடிகள்

திக்கெட்டும் பறந்திருக்கும்.

சீனக்கவிதை

ஆங்கிலத்திலிருந்து தமிழில்: பேனா. மனோகரன்

# இலக்கிய உலகில்...!

ஆனந்தி

அ. ந. கந்தசாமி மறைந்து ஆறு ஆண்டுகளின் பின் அவரது நினைவு தினத்தை நவ கலா மன்றத்தினர் கொண்டாடினர். கொள்ளுப்பிட்டி தேயிலைப்பிரசார சபையில் நினைவாஞ்சலி நடிகவேள் லடிஸ் வீரமணி தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரையில் திரு. எம். எஸ். எம். இக்பால் காரசாரமாக சிலரைக் கண்டித்துப் பேசினர். டாக்டர் இந்திரகுமார், இர. சிவலிங்கம், எஸ். பொ. எ. இளஞ்செழியன், கே. டானியல், எச். எம். பி. முஹிதீன், சிலையூர் செல்வராசன் செ. கணேசலிங்கன் ஆகியோர் அ. ந. க. பற்றி மட்டுமல்ல பரந்த தமிழ் இலக்கிய உலகு பற்றியே நினைவு கூர்ந்தனர்.

* * *

அக்கினிப் பூக்கள் என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டதன் மூலம் ஈழவாணன் கவிஞர் உலகில் பெரிய நட்சத்திரமாகி விட்டார். அவரது கவிதை நூலின் வெளியீடு ஒருமாதத்தில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும நடந்தேறியது. கொழும்பில் அரசின் செல்வாக்குடன் அமைச்சர் முதல் பிரபல விமர்சகர் உட்பட யாவரது பாராட்டுகளையும் கவிதைகள் பெற்றன. யாழ்ப்பாணத்தில் புரட்சிகர கலை, இலக்கியத்தில் ஆர்வமுள்ள கவிஞர் விமர்சகரது பாராட்டு கவிதைகளுக்கு கிடைத்தது, அவரது கவிதை நூல் இரண்டாகப் பிரிந்து நிற்கிறது. ஒன்று புரட்சிகர கவிதைகள். மற்றது: சாதாரண கவிதைகள்

* * *

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை புரைமைக்கும் வேலையில் பழைய பல எழுத்தாளர்கள் ஈடுபட்டுள்ளனர். அரசை சார்ந்தோரும் எதிர்ப்போரும் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். எவ்வித அரசியல் சித்தாந்தத்தைக் கொண்டு இவ்வெழுத்தாளா சங்கம் இயங்கப் போகிறது என்பதை இச்சங்கத்தை எப்பகுதியினர் ஆக்கிரமிக்கப் போகின்றனர் என்பதைக் கொண்டே கணிக்க முடியும்.

* * *

'ஜனவேகய' என்ற சிங்கள வார இதழ் சிங்கள மக்களிடையே வேகமாக வளர்ந்த இதழாகும். இவ்விதழுக்கு அரசின் இரத்த உறவுண்டு. அரசுக்கு இந்த இதழின் ஆதரவுண்டு. இதே இதழ் தமிழிலும் மிக விரைவில் ஒரு வார இதழை வெளிக்கொண்டுவர உள்ளதாம்! அதற்கு பிரபல தமிழ் நாவலாசிரியர் ஒருவர் ஆசிரியராகலாம்! தமிழர்களுடைய பிரச்சனைகளையும் அவற்றைத் தீர்க்காவிடின் அதனால் ஏற்படக்கூடிய பயங்கர விளைவுகளையும் சிங்கள மக்களிடை 'ஜனவேகய' இதழ் குழுவினரே நன்கு உணர்ந்தவர்களாவர்.



* * *

வீரகேசரி தமிழ் நூல்களை வாணிப நோக்கத்துடன் வெளியிட்டு பரவலாக விற்பனை செய்வதுபோல மற்றோர் பிரபல பத்திரிகை நிலையமும் மாதந்தோறும் நூல்களை வெளியிட உள்ளதாம். இதனால் பல புதிய எழுத்தாளர்கள் அறிமுகமாகலாம். இதனால் இலக்கியத் தரம் உயர்ந்துவிடும் என்று உறுதியாகக் கூறிவிடமுடியாது. வியாபாரப் போட்டிகள் வழமையாகவே எழுத்துகளை மலிவாக்கி மேல்நாடுகள் போல பாலியல், துப்பறிதல், பயங்கரக் கொலைகள் ஆகிய துறைகளுக்கு ஈர்த்துவிடுவது வழமையாகும். வர்க்க சமுதாயத்தில் இவை தவிர்க்க முடியாத நிகழ்வுகள். ●

## பொங்கல்

அறுவடைக்கு முன்னால்
ஆறேழு வாரங்கள் —
அரை வயிறு வெறுவயிறு
உறுமிப் பொருமுகுது.
உழைப்பைப் பறித்தொருவர்
ஊருக்குப் பெரியவராய்
உறவுக்கும் உற்றவர்க்கும்
ஊர் நடுவே பொங்குகிறார்.
சாமிக்கு மட்டுமில்லை
மாட்டுக்கும் பொங்குகிறார்.
சரியான திசை பார்த்துப்
பொங்கல் வழிந்து விழச்
சரித்து வைத்த பெரும்பானை
நிரமபி வழிகிறதாம்.
புத்தாடைகள் பழவகைகள்
பூக்களுக்கும் குறைவில்லை.
உழைப்பிற்கு உரியவர்கள்
மனம் புழுங்கி அழுபவர்கள்
பொங்கி எழுந்திட்டால்
வேகுவது வேறொன்று!

— மணி

## நித்திரை கலைப்பீர்....

வரதபாக்கியான்

மெத்தையிற் தூங்கு முங்கள்
மூலையில் நாங்க ளிங்கு . ...
கத்திடும் குரல்கள கேளா . ...
கடும்பசியாலே... . எங்கள்
உற்றவர் மனைவி பிள்ளை
உளறிடும் குரல்கள் கேளா
நித்திரை கலைப்பீ ரின்றேல்.. ...
நிகழ்த்துவம் புரட்சி நாளை......

காரினில் செல்லு முங்கள்
கண்களுக் கெங்கள் வாழ்க்கை
பாரியதொல்லை, நாங்கள்
பாதையில், வாழ, வேறு
ஊரவர் வந்தால், மானம்
உடைவதும் உண்மை அதனால்
என்றே
சேரிகள் ஒழிப்பீர் புரட்சியை தணிக்க
மாட்டீர்.

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.


## ஜி. சி. ஈ. (உயர்தர வகுப்பு) நூல்கள் :

1. உயர்தர இரசாயனம் — கணேசர் & சிவபாலன் 36/-
2. தாவரவியல்—பரமானந்தன் 2 பகுதிகள் 28/-
3. விலங்கியல் சங்கரஐயர் 4 பகுதிகள் 25/75
4. விலங்கியல் பயிற்சிகள் 3/-
5. திருத்தொண்டர் புராணம் 3/-
6. இரட்சணிய யாத்திரிகம்: — சிலுவைப் பாடு 2/-
7. A CONCISE ATLAS GEOGRAPHY OF CEYLON — Foreword by Prof. K. Kularatnam 5/-

## ஜி. சி. ஈ. (சாதாரண வகுப்பு) பாட நூல்கள்:

1. நவீன இரசாயனம் I 4/50
2. நவீன இரசாயனம் II 8/75
   பரமானந்தன் & பாலசுந்தரம் [திருத்திய பதிப்புகள்]
3. நவீன உயிரியல் I 5/00
4. நவீன உயிரியல் II 6/50
   பரமானந்தன், இராஜசேனன் & குலேந்திரன்
   [திருத்திய பதிப்புகள்]
5. நவீன பௌதிகம் I 5/50
6. தமிழ் இலக்கிய விளக்கம் 3/00
   க. கி. நடராசன் & இரத்தினசிங்கம்

வாங்கிவிட்டீர்களா ?

'தமிழவேள்' எழுதிய

தமிழிலக்கியத் தொகுப்பு — விளக்கம்

'அ' பாடத்திட்டம் வினாவிடை

கிடைக்குமிடம்:

**விஜயலட்சுமி புத்தகசாலை**

248, காலி வீதி, வெள்ளவத்தை,

கொழும்பு–6

தொலைபேசி: 88930


இப்பத்திரிகை கொழும்பு 12, டாம் வீதி, 201ல் வசிக்கும் மீ. கணேசலிங்கன் அவர்களால், அதே முகவரியிலுள்ள குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
நிருவாக ஆசிரியர் : மீ. கணேசலிங்கன்.